Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (13-7-66) இதழ் 153

பராபவ ஆனி 29 ரபி அவ் 23 புதன்கிழமை

## திருடிய பணத்தைக் களவாடியதாக பொலிசார்மீது குற்றச்சாட்டு!

மன்னார், செவ்வாய்

தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள்மீது ரூபா 700 களவாடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. தலைமன்னாரைச் சேர்ந்த ஜெனுல் அப்டின் என்பவர் தனது கைக்கடிகாரமும் பணமும் களவுபோனதைத் தொடர்ந்து பின்னர் உதவி பொலிஸ் அதிகாரிகளுக்குப் புகார் செய்திருந்தார். இதனை விசாரணை செய்ய இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சென்றபொழுது காணாமற்போனதாகக் கூறப்படும் பணத்தையும் கடிகாரத்தையும் கைப்பற்றினர். கைப்பற்றிய பொருட்களை பொலிஸ் நிலையத்தில் இரு பொலிஸ்காரர்கள் ஒப்படைத்தபொழுது ரூபா 700 குறைவாயிருப்பதைப் பொலிஸ் அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

# ரூ. 35 லட்சம் செலவில் 2 மாடி நவீன சந்தை

## யாழ். நகர மத்தியில் நிறுவ விசேஷ ஆணையாளர்கள் முடிவு

### ரூ. 2 லட்சம் செலவில் புதிய வாடிவீடும் கட்டப்படும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண நகரின் மத்தியில் பல நவீன வசதிகளைக்கொண்ட சந்தையொன்று முப்பத்தைந்து லட்சம் ரூபா செலவில் விரைவில் அமைக்கப்படவிருக்கிறது. இந்த நவீன சந்தை இரண்டு மாடிகளைக் கொண்டதாயிருக்கும்.

இதனுடன் இரண்டு லட்சம் ரூபா செலவில் ஒரு நவீன வாடிவீடும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும்.

**புதிய சந்தை**

யாழ்ப்பாணத்தின் புதிய நவீன சந்தையின் ஒரு எல்லை காங்கேசன்துறை வீதியைக் கொண்டதாகவும் மற்றைய எல்லை தற்பொழுதுள்ள இறைச்சிக்கடைப் பகுதியைக் கொண்டதாகவுமிருக்குமென்றும் இடையிலுள்ள கஸ்தூரியார் வீதி அகற்றப்படலாமென்றும் தெரியவருகிறது.

புதிய சந்தை நிறுவப்படும் பட்சத்தில் தற்பொழுது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அருகாமையிலிருக்கும் மின்சார நிலையம் வேறு இடத்துக்கு அகற்றப்படலாமென்றும் இக்கட்டிடம், சந்தையின் ஒரு காரியாலயமாக இயங்கலாமென்றும் சொல்லப்படுகிறது.

கொழும்பிலிருந்து நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த உள்ளூராட்சி ஆணையாளர் திரு. டபிள்யு. ஏ. பெர்ணுண்டோ தலைமையில் யாழ்ப்பாணம் மாநகர சபையில் நடைபெற்ற விசேஷ கூட்டத்திலேயே மேற்கூறிய முடிவுகள் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. இக்கூட்டத்தில் கொழும்பிலிருந்து இங்கு வந்த நகர நிர்மான சிற்பி திரு. நெவில் குலரத்ன, யாழ்ப்பாணம் மாநகர சபை கமிஷனர் திரு. ஹட்ஸன் செல்வராஜா, மாநகரசபை விசேஷ ஆணையாளர்கள் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர், திரு. என். நடேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நவீன சந்தை அமைக்கும் யோசனை இக்கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி பெற்று விரைவாகவே கட்டட வேலைகளை ஆரம்பிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

**வாடிவீடு**

சுமார் இரண்டு லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படவிருக்கும் புதிய நவீன வாடிவீடு யாழ்ப்பாணம் மாநகர சபைக்குப் பின்புறமாகவுள்ள டச்சு சேமக்காலையில் அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பஸ் நிலையம்**

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்தை விரைவாகக் கட்டிமுடிப்பதென்றும் கட்டட வேலைகளைத்துரிதமாக மேற்கொள்வதென்றும் அதிகாரிகள் தீர்மானித்ததாகக் கூறப்பட்டது.

யாழ்ப்பாண நகரின் முக்கிய பகுதிகளுக்கும் இவ்வதிகாரிகள் நேரில்சென்று பார்வையிட்டனர், கொழும்பிலிருந்து வந்த அதிகாரிகள் நேற்றுப்பிற்பகல் கொழும்பு சென்றனர்,

பம்பரகெல்லை தோட்டத்தில்

## தோட்டத்தொழிலாளர் பொலிஸார் மோதல்

### கூட்டத்தைக் கலைப்பதற்காக கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

கொழும்பு, செவ்வாய்

வேலைநிறுத்தம் செய்யும் தோட்டத்தொழிலாளருக்கும் பொலிஸாருக்குமிடையே லிண்டுலவிலுள்ள பம்பரகெல்லை தோட்டத்தில் நேற்று ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து நுவரேலியா பகுதியில் பொலிஸாரின் ரோந்து வேலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தேயிலைக் கொழுந்தை ஏற்றிக்கொண்டு சென்ற லொறியொன்றை வேலைநிறுத்தம் செய்யும் ஐ. தொ. காங்கிரஸ் தோட்டத் தொழிலாளர்கள் இடைமறித்ததைத் தொடர்ந்து இம்மோதல் ஏற்பட்டது. வேலைநிறுத்தம் செய்பவர்களைக்கலைப்பதற்காக பொலிஸார் முதலில் வானத்தை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்து பின்னர் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர்.

டெலிபோன் வயர்கள் யாவும் இப்பகுதியில் அறுந்துகிடக்கக் காணப்பட்டன.

வடக்கு, கிழக்குக்கு

## சிங்கள ஆசிரியரை அனுப்புவது குறித்து குறிப்பிடவில்லை

### சிம்மாசனப் பிரசங்கத்துக்கு எதிர்க்கட்சியினர் திருத்தம்

கொழும்பு, செவ்வாய்

கவர்னர் ஜெனரலின் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணைக்கு எதிர்க்கட்சியினர் பல திருத்தங்களைக்கொண்டு வந்துள்ளனர். பார்லிமெண்டில் சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான விவாதம் 14-ம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும்.

**சிங்கள ஆசிரியர்**

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதுகுறித்து சிம்மாசனப் பிரசங்கத்தில் அரசாங்கம் குறிப்பிடத் தவறிவிட்டது என்று எதிர்க்கட்சியினர் தங்களது திருத்தப் பிரேரணையில் தெரிவித்துள்ளனர். இதில் சகல எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் கையெழுத்திட்டுள்ளனர்.

வியட்னும் நெருக்கடி பற்றி சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும் வாழ்க்கைச் செலவு குறைப்பது குறித்தும் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்ப்பதுபற்றியும் எதுவுமே இடம்பெறவில்லை என்றும் எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

வங்கி வேலை நிறுத்தம்

## ரோயல் கமிஷன் நியமிக்க உத்தேசம்

### மந்திரிசபை முடிவு செய்தது

கொழும்பு, புதன்

வங்கி ஊழியர் வேலைநிறுத்தம் சம்பந்தமாக ரோயல் கமிஷன் ஒன்றை நியமிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

பிரச்னைக்குரிய வங்கி ஊழியரின் பதவி உயர்வு பற்றி விசாரணை நடத்தி, சாட்சியங்களைப் பதிவு செய்து அவற்றை பரிசீலனை செய்யவும், ஊழியரின் சேவைக் காலம், திறமை, நன்னடத்தை முதலியவற்றை பரிசீலித்து குறிப்பிட்ட ஊழியருக்கு பதவி உர்வு அளிக்கப்படவேண் ம் என்பது பற்றிச் சிபார்சு செய்யவும் இக்கமிஷனுக்கு அதிகாரம் இருக்கும்.

இன்று காலை கூடிய மந்திரிசபைக் கூட்டத்தில் ரோயல் கமிஷன் ஒன்றை நியமிப்பதென முடிவு செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. தொழில் கமிஷனர் திரு. விமலன் அபயவீராவும் மந்திரி சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

ரோயல் கமிஷன் நியமிக்கப்பட விருப்பது பற்றி அரசாங்கம் வங்கி நிர்வாகத்துக்கும், ஊழியர் சங்கத்துக்கும் தெரிவித்துள்ளது.

நாஷனல் அன்ட் கிறிண்லேய் வங்கி ஊழியரின் வேலைநிறுத்தத்தைத் தொ[illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

## சவுந்தரநாயகம் பற்றி விசாரிக்க பிரிட்டிஷ் துப்பறியும் பொலிஸார்

கொழும்பு, செவ்வாய்

தற்பொழுது இலங்கையிலிருக்கும் திரு. எமில் சவுந்தரநாயகம் பற்றி விரிவான விசாரணைகள் நடத்துவதற்காக பிரிட்டனிலுள்ள ஸ்கொட்லாந்துயார்ட்டிலிருந்து துப்பறியும் பொலிசார் இலங்கைக்கு வரவிருக்கின்றனர்.

பிரிட்டனின் ஒரு இன்சூரன்ஸ் கம்பெனி திவாலானதற்கு திரு. சவுந்தரநாயகம் காரணமாயிருந்ததாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்தே இத் துப்பறியும் பொலிசார் இங்கு வரவிருக்கின்றனர். இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷ

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### அந்திய கிரியை

கொழும்பு மார்க்கெட்டிங் இலாகா காரியாலயத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய திரு. எஸ். வி. செல்லையா அவர்களின் அந்திய கிரியைகள் (31-ம் தினம்) இம்மாதம் 15-ம் திகதி அன்னரது இல்லத்தில் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது. உற்ருர் உறவினர் அனைவரும் அழைக்கப்படுகின்றனர். திருமதி மகேஸ்வரி செல்லையா, ஆனந்த நிலையம், வட்டுக்கோட்டை. 7(4

### கல்வி

சிங்கள வகுப்புகள்

பாலர் வகுப்புத் தொடக்கம் எஸ். எஸ். ஸி. வகுப்பு வரை சிங்கள வகுப்புகள் நடாத்தப்படும். ஐக்கிய கலாசாலை, கரவெட்டி/107, பருத்தித்துறைவீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 741

### காணவில்லை

சூட்கேஸ்

வட்டுக்கோட்டைச் சந்திக்கும் அராலி பாலத்துக்குமிடையில் காட்போட்பெட்டிக்குள் வைக்கப்பட்டு சூட்கேஸ் ஒன்று தவறிவிட்டது கண்டெடுப்பவர்கள் தயவு செய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 745

## வானொலி

### கொழும்பு

புதன்.13-7-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நிலைய ஒலிப்பதிவுகள், 7-45 பேச்சு 'இந்திய வரலாறு' எஸ். கே. சிற்றம்பலம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழலும் கிளாரினெட்டும். 9-30 பாட்டு, 10-00 நேயர்விருப்பம்.

## உலகத்துக்கு மாறு இப் பையன்...!

ஜோஹனஸ்பேர்க், செவ் தென் ஆபிரிக்காவிலுள்ள ஜோஹனஸ்பேர்க் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஓர் 14 வயதுச் சிறுவனின் உள் உடலுறுப்புக்கள் அத்தனையும் எதிர்மாருக அமைந்துள்ளன என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

கிறிஸ்போ மேயர் எனப்படும் இச்சிறுவனின் இதயம் வலது பக்கத்திலிருப்பதாகவும், இதே மாதிரியே மற்றும் எல்லா உறுப்புக்களும் வழக்கத்துக்கு மாருக அமைந்துள்ளதாகவும் தெரிகிறது.

'ஒரு சாதாரண மனிதனின் கண்ணாடிப் பிரதிபிம்பமே கிறிஸ்டோ' என டாக்டர் ஒருவர் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

## கி. வா. ஜ. வுக்கு . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசுகையில், திரு. கி. வா. ஜ ஒரு நடமாடும் இலக்கிய களஞ்சியம் என்றும், தமிழுக்காக சலியாது உழைத்து வெற்றி கண்டவர் என்றும் ஒரு சிறந்த பத்திரிகையாசிரியர் என்றும், சொல்நயம், கவிநயம் ததும்ப எளிய நடைமுறையைக் கையாண்டு பாமரனும் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில், புலமையும், புதுமையும் கலந்து உரைநடையில் எழுதக்கூடிய ஆற்றல் மிக்கவர் என்றும் பாராட்டினார்.

### ஸ்ரீ பக்தவத்ஸலம்

முதலமைச்சர் திரு. பக்தவத்ஸலம் விழாவுக்கு தலைமைவகித்துப் பேசுகையில், திரு. கி. வா. ஜ. போன்ற தமிழ் இலக்கிய கர்த்தாக்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். எதிர்கால சந்ததிகளும் நன்ருக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினார்.

மத்திய அரசாங்க மந்திரி திரு. ஓ. வி. அளகேசன் மணி திரு. கி. வா. ஜ. வின் நற்பணி தொடர்ந்து தமிழ்நாட்டிற்கு நீடிததுகிடைக்க வேண்டும் என்று கூறி, மணிவிழா மலரை சமர்ப்பித்தார்.

மணிவிழாக்குழுவின் தலைவர் திரு. என். மகாலிங்கம், திரு. கி. வா ஜகந்நாதனுக்கு பொன்னுடை போர்த்தி, ரூ. 40,101 அடங்கிய பண முடிப்பையும் அளித்தது டன், திரு. கி. வா. ஜ. தன்னுடைய சுயசரிதத்தையும் 'என்னுடைய குரு' என்ற தலைப்பில் ஐயருடைய சரித்திரத்தையும் எழுதி தமிழ் நாட்டுக்கு அளிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யர் நூல்நிலையத்தின் சார்பில் டாக்டர் ஐயரவர்களின் பேரன் திரு. கே. சுப்பிரமணியம் ஒரு வாழ்த்துப்பா வாசித்தளித்தார்.

ஈழநாட்டு அன்பர்களின் சார்பில் ஒரு வெள்ளிப்பேழையில் வாழ்த்துப்பா அளிக்கப்பட்டது. மற்றும்பல சங்கங்கள், பிரமுகர்கள் சார்பில் கி. வா. ஜ. வுக்கு மாலைகள் அணிவிக்கப் பட்டதுடன் பரிசுகளும் வழங்கப் பட்டன.

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் துறைத் தலைவர் டாக்டர் மு. வரதராசனர் பேசுகையில், இந்த விழா தமிழர்கள் பூரிப்படையும் ஒரு நன்னள். கலைமகள் வாயிலாகவும் ஊர் ஊராகச்சென்று தமிழ்தொண்டு புரிந்துவருபவர் ஸ்ரீ கி. வா. ஜ என்றும் கூறினர்.

இலக்கியத்துறை, சமயத்துறை, எழுத்துத்துறை, பேச்சுத்துறை ஆகிய எல்லா துறைகளிலும் சலியாது உழைத்து வெற்றிகண்டவர் என்றும் திரு. வரதராசனர் தொடர்ந்து கூறினர்.

எழுத்தாற்றல், சொல்லாற்றல் படைத்தவர் என்றும் காலத்திற்கேற்ப மக்கள் விரும்பத்தக்க எளிய முறையில் தமிழைக் கையாண்டு வெற்றிகண்ட கர்மவீரர் அவர் என்றும் திரு. மு. வ. கூறினர்.

மரபு பிறழாத புலமையுடன் எளிய நடையுரையுடன் கூடிய கட்டுரைகள் பல தமிழ்நாட்டுக்கு அளித்தவர் திரு. கி. வா. ஜ. என்றும் சமயத்துறையிலே சிறந்த தொண்டு புரிந்தவர் என்றும் திரு. அப்பண்ண சுவாமிகளுடைய உயர்ந்த கருத்துக்களைக் கவிதையாக எழுதியிருக்கிருர் என்றும் திருமதி சௌந்தரம் கைலாசம் பாராட்டிப் பேசினர்.

உள்ளத்தால், செயலால் பண்பால் உயர்ந்த ஒரு சிறந்த தமிழ் மகனை, பத்திரிகாசிரியரை, இலக்கிய கர்த்தாவைக் கௌரவிக்க நாம்இங்கு கூடியிருக்கிறேம் என்றும் அன்னுடைய ... விப்பது அவருடைய ஆசானை டாக்டர் அய்யரையும் அவர் குருவான மகாவித்வான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையையும், தமிழ்மரபையும் நாம் கௌரவிக்க கூடியிருக்கிறேம் என்ருர் திருமதி சௌந்தரம்கைலாசம்.

தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்தஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான் பேசுகையில பழமைக்கும் புதுமைக்கும் பாடுபட்டவர் என்றும் குரு பக்திக்கு திரு. கி. வா. ஜ. சிறந்த உதாரணம் என்றும் கூறினர்.

திரு. கி. வா, ஜ. தன்னைப் பாராட்டிய எல்லோருக்கும் நன்றிதெரிவித்தார்.

## பழம் நடிகர் காலமானர்

கோலாப்பூர், ஜூலை 12 சலனப்படகாலத்தில் பிரபல நடிகராக விளங்கிய வித்தல் ரகுநாத்தேசாய் இங்கு காலமானர். மாஸ்டர் வித்தல் என்ற பெயருடன் நடித்துவந்த அவருக்குவயது 62.

## யாழ்ப்பாணத்தில் புதிய பஸ்நிலையம்

யாழ்ப்பாணம், புதன்

யாழப்பாணத்தில் அமைக்கப்பட்டுவரும் புதிய பஸ் நிலையம் இன்னும் சில வாரங்களில் பூர்த்தியாகவிருக்கின்றது. முன்னர் பஸ்நிலையம் இருந்த இடத்திலேயே இந்தப் புதிய பஸ்நிலையம் அமைக்கப்படுகிறது. புதிய பஸ்நிலையத்துக்கான வேலைகள் இப்பொழுது மும்முரமாக நடந்துகொண்டிருக்கிறகின்றன.

புதிய பஸ்நிலையம் பல நவீன வசதிகளைக்கொண்டதாக இருக்கும். பிரயாணிகள் பஸ்ஸுக்குக் காத்திருப்பதற்காக வசதியான இருப்பிடங்கள், பஸ்கள் எங்கெங்கே எந்நேரத்துக்குப் போகின்றன என்பதைப் பிரயாணிகள் சுலபமாக அறிந்து கொள்வதற்காக அறிவிப்பு ஒலிபெருக்கிகள் ஆகியன இந்தப் புதிய பஸ் நிலையத்தில் பிரயாணிகளுக்கு 'விஷேச'மாகத் தரப்படுகிறது.

## விளம்பரம்

### அடைவு நகை ஏல விற்பனவு

'வசந்தம்' மானிப்பாய், திரு. வே. க. இராசலிங்கம் அவர்களின் அடைவுகடையில் 1-1-1962 தொடக்கம் 31-12-64 வரை வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 1966 ஆகஸ்ட் நாலாம் திகதி (4-8-66) வியாழக்கிழமை காலை ஒன்பது மணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்.
653

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## தந்தையைப்போல் தனயன்



தன் தந்தையைப் போலவே மகனும் ஒஸ்டர்மில்க் அருந்தி, ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வான்.

ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாருத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும் விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.




துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் அருந்தும் குழந்தைகள் பெலஞன சுக் வளர்ச்சி பெறுகிருர்கள்.

# ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ–அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபால் பெட்டி 23, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க படைபலம் பெருகும்

# வியட்னுமில் வல்லரசு கெடுபிடி

## வலுத்து வருகிறது!

## 17-வது அட்சரேகைக்கப்பால் விமானத்தாக்குதல் அதிகரிக்கும்

### ஹானோய்க்குரஷ்யா அதிகராணுவஉதவிஅளிக்கிறது

### யுத்தம் நெடுங்காலம் நடக்குமாம்

வாஷிங்டன், ஜூலை 12

வியட்னும் சம்பந்தமாக வல்லரசுக் கெடுபிடி முற்றிவருகிறது. வடக்கே 17-வது அட்சரேகைக்கப்பால் அமெரிக்க விமானத் தாக்குதல் தீவிரமாக அதிகரிக்கப்படும் என்றும், தென்வியட்னுமில் ராணுவ, விமானப்படைகள் மேலும் பெருக்கப்படும் என்றும் அமெரிக்கா அறிவித்திருக்கிறது. அதேசமயம் அமெரிக்க தாக்குதலுக்கெதிராக வடவியட்னுமுக்கு ராணுவ பொருளாதார உதவிகள் கூடுதலாக்கப்படும் என மாஸ்கோ கூறியுள்ளது.

### ஊடுருவல் நிற்கவில்லை

அமெரிக்கப் பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமரா நேற்று நிருபர்கள் மகாநாட்டில் பேசியபோது சமீபத்தில ஹானோய், ஹைபாங் தாக்குதல் வடவியட்னுமிலிருந்து ஆட்களும், ஆயுதங்களும் ஊடுருவி வருவதை நிறுத்தவில்லை எனக் கூறினார். அதேசமயம் 17-வது அட்சரேகைக் கப்பால் குண்டு வீச்சு இன்னும் தீவிரமாக அதிகரிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

### நெடுங்காலம் நடக்கும்

தென் வியட்னுமில் ஏற்கனவேயுள்ள 2,80,000 அமெரிக்க வீரர்களின் எண்ணிக்கையும், விமானப் படைகளின் எண்ணிக்கையும் மேலும் அதிகரிக்கப்படும் என்றும் மக்னமாரா கூறினார். வியட்னும் யுத்தம் நெடுங்காலம் நீடிக்கும் என்ற கருத்துக்கிணைய இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தொடர்ந்து அவர் கூறினார்.

### ஜோன்ஸன் உறுதி

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற உயர்தர மகாநாடு ஒன்றுக்குப்பின் வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் நிருபர்களிடம் பேசியபோது வியட்னும் யுத்தத்தை இறுதிவரை நடாத்திப் பார்த்துவிட ஜனதிபதி ஜோன்ஸன் உறுதி கொண்டிருக்கிருர் எனத் தெரிவித்தார். ராணுவம் வெற்றி பெறுவது குறித்து வடவியட்னும் இன்னும் நம்பிக்கை கொள்ளுமானல் அது ஆபத்தாகும் என்றும் ரஸ்க் தெரிவித்தார்.

### ரஷ்யாவின் எதிர்ச் சவால்

அதேசமயம் வியட்னுமின் புதிய நிலைமையைத் தொடர்ந்து வட வியட்னுமுக்கு மேலும் பொருளாதார, ராணுவ உதவி வழங்கவிருப்பதாக ரஷ்யா அறிவித்திருக்கிறது. வார்ஸா ஒப்பந்த நாடுகளின் முடிவை அமுல் நடத்தும் வகையில் இதற்கு ஏற்பாடு செய்யுமாறு பல சோவியத் ஸ்தாபனங்களுக்கு உத்தரவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

### முன்கூட்டியே தெரியாது

ஹானோய், ஹைபாங் குண்டு வீச்சுபற்றி முன்கூட்டியே ரஷ்யாவுக்குத் தெரியும் என்ற சீன வெளிமந்திரி மார்ஷல் சென்யீயின் குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்திருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டு வெறும் பிரசாரம் என்பதால்தான் முக்கிய மேலைப் பத்திரிகைகள் கூட இதுபற்றி முக்கியத்துவம் கொடுக்கவில்லை என 'பிராவ்டா' பத்திரிகை கூறியுள்ளது. இது விஷயம் ரஷ்யாவுக்கு முன்கூட்டியே தெரியும் என்ற விஷயத்தை அமெரிக்காவும் மறுத்திருக்கிறது. குண்டு வீச்சுக்கு முன் ரஷ்யாவுக்கு அமெரிக்கா இதுபற்றித் தெரிவிக்கவில்லை என வாஷிங்டனில் கூறப்பட்டது.

ஹானோய், ஹைபாங் குண்டு வீச்சைத் தொடர்ந்து அமெரிக்காவில் ஜனதிபதி ஜோன்ஸனின் செல்வாக்கு அதிகரித்துள்ளதாய் ஒரு அமெரிக்க கணக்கெடுப்பு அறிவிக்கிறது.

### 5 விமானங்கள் சேதம்

நேற்று வட வியட்னுமுக்குரிய 5 அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாயும், மேலும் பல விமானங்கள் சேதப் படுத்தப்பட்டன என்றும் ஹானோய் செய்தி ஒன்று கூறியது.

நேபாள தலைநகர் காட்மாண்டுவிலும், புதுடில்லியிலும் அமெரிக்க குண்டு வீச்சை எதிர்த்து நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

### விளையாட்டுக்கள் ரத்து

இம்மாதம் அமெரிக்காவுடன் நடைபெறவிருந்த விளையாட்டுப் போட்டிகளை ரஷ்யா ரத்துச் செய்துவிட்டது. ரஷ்ய பாஸ்கெட் பந்தாட்ட கோஷ்டி அமெரிக்கா செல்லவிருந்தது. வேறு சில விளையாட்டுக்களும் நடைபெறவிருந்தன ஆனல் அமெரிக்க குண்டு வீச்சை ஆட்சேபித்து இவைகள் ரத்துச் செய்யப்பட்டன.

### இந்தோனேஷியா

ஜாகர்த்தா, ஜூலை 12

சர்வதேச நிதி ஸ்தாபனத்தில் மீண்டும் தன்னைச்சேர்த்துக்கொள்ளுமாறு இந்தோனேஷிய விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறது.

### எல்லைக் காந்தி மீண்டும் சந்திப்பு

காபுல், ஜூலை 12

இந்திய உபஜனதிபதி டாக்டர் ஸகீர்ஹுஸெய்ன், எல்லைக்காந்தி கான் அப்துல் கபார்கானுடன் இரண்டாவது தடவையாகப் பேச்சு நடத்தினர். 24 மணி நேரத்தில் இரண்டு சந்திப்புக்களும் நடைபெற்றன.

### அந்தமானில் புதியகடற்படைத்தளம்

புதுடில்லி, ஜூலை 12

அந்தமான் — நிக்கோபர் தீவுகளில் புதிய கடற்படைத்தளம் ஒன்று அமைக்கப்பட்டுவருவதாக, கடல் தளபதி அட்மிரல் சட்டர்ஜி கூறினர் விசாகபட்டினத்தில் மற்ருேர் கடற்படைத்தளம் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினர்.

### 1130 பேர் கைது

லக்னே ஜூலை 12

உத்தரப்பிரதேசத்தில், உத்தேச பொதுவேலை நிறுத்தத்தை முன்னிட்டு நேற்று வரை 1130 பேர் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள்.

### சாரதி லைசென்ஸ் யாருடையது?

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியிலுள்ள சிறுவர் வார்டிலிருந்துதிரு. இ.முத்து என்பவரால் ஒரு சாரதி லைசென்ஸ் தண்டெடுக்கப்பட்டு ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அத்தாட்சி காண்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரியோனி கூட்டறிக்கை

## "நெருக்கடியை தவிர்க்கும் முயற்சியில் ஒத்துழையுங்கள்"

### உலகநாடுகளுக்கு டிட்டோ-இந்திரா வேண்டுகோள்

பிரியோனி, ஜூலை 12

உலகில் யுத்தநெருக்கடிகளைத் தளர்த்தும் புதிய முயற்சியில் சமாதானத்தை விரும்பும் சகல நாடுகளையும் தங்களுடன் சேர்ந்து கொள்ளும்படி யூகோ அதிபர் டிட்டோவும், இந்தியப் பிரதமர் இந்திராவும் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிருர்கள்.

இரு தலைவர்களுக்குமிடையே பிரியோனியில்நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவில்கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

உலகின் சில பகுதிகளில் குறுக்கீடுகளும், படைபலமும், ஆயுதக் குறுக்கீடுகளும் இருப்பது குறித்து இருதலைவர்களும் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவை யுத்தவாய்ப்புக்களை அதிகரிக்கும் என்றும் மண்டலசார்பின்மை ஒன்றுதான் போரைத் தவிர்க்கும் என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள்.

அண்டை நாடுகளுடன் கருத்து வேற்றுமைகளைத் தீர்க்க பாரதம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளை அதிபர்டிட்டோ பாராட்டியிருக்கிருர்.

இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு ஸ்ரீமதி காந்தி விடுத்த அழைப்பை ஜனதிபதி டிட்டோவும், அவரது மனைவியும் ஏற்றுக் கொண்டிருக்கிருர்கள்.

பேச்சுவார்த்தைக்குப்பின் இருதலைவர்களும் நிருபர்களிடையே பேசினர்கள்.

வியட்னும்பிரச்னைகுறித்து தாங்கள் எந்தக் குறிப்பிட்ட முடிவுக்கும் வரவில்லை என்றும், அங்கு ஆக்கிரமிப்புத் தொடர்ந்து நடைபெறுவதாயும் டிட்டோ கூறினர்.

வியட்னும் பிரச்னைபற்றி ஸ்ரீமதி காந்தியுடன் தாம் மீண்டும் டில்லியில் ஆராயப் போவதாயும், டிட்டோ, நாஸர், இந்திரா முத்தரப்பு மகாநாட்டில் இப்பிரச்னை வரும் என்றும் அவர் கூறினர். டாஷ்கண்ட் ஒப்பந்தம் இந்தோ-பாகிஸ்தான் பிரச்னைகளைத் தீர்க்க ஒரு நல்ல அடிப்படையாக அமைந்துள்ளது என்றும் டிட்டோ கூறினர்.

யூகோவில் தமது பேச்சுக்களை முடித்துக் கொண்டு ஸ்ரீமதி காந்தி இன்று மாஸ்கோ புறப்பட்டார்.

## கி. வா. ஜ. வுக்கு ஈழத்து ரசிகர்கள் வாழ்த்துப்பா

### மணி விழாவில் பல பிரமுகர்கள் பாராட்டு

சென்னை, ஜூலை 12

மகா மஹோபாத்யாயடாக்டர் உ. வே. சுவாமிநாதய்யரின் தலைமாணக்கரும், 'கலைமகள்' ஆசிரியருமான ஸ்ரீ கி. வா. ஜகந்நாதனின் மணிவிழா (60வயது ஆண்டுவிழா) மவுண்ட்ரோட் பாலர் அரங்கத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

காலையில்மதுரைசர் வகலாசாலை உப அத்தியட்சகர்ஸ்ரீ டி. பி. மீனுட்சிசுந்தரனர் தலைமையில் கவிஞர்கள் அரங்கு நடைபெற்றது.

மாலையில் நடைபெற்ற பாராட்டுவைபவத்தில் மணிவிழா குழுத்தலைவர் பொள்ளாச்சி ஸ்ரீ என். மகாலிங்கம் எம். எல். ஏ. எல்லோரையும் வரவேற்ருர்.

தமிழுக்காக உழைக்கும் பெரியோர்களைப் பாராட்டுவதுசாலச் சிறந்ததுஎன்றும், 'தமிழ்தாத்தா' என்றுதமிழ்நாட்டில் வழங்கப்பெறும் டாக்டர் சுவாமிநாத ஐயரவர்களின் பிரதம சீடரான திரு. கி, வா. ஜ. வைப் பாராட்டுவது அவரது குருவைப் பாராட்டுவது போலாகும் என்று கூறியதுடன், இலங்கை, மலேசியா, பர்மா முதலிய கடல்கடந்த பகுதிகளிலும் தமிழின் மணம் பரப்பி பேருதவி செய்தவர் திரு கி. வா. ஜ. என்று கூறினர். திரு. கி. வா. ஜ. வைக் கௌரவிப்பது தமிழ் மரபுக்கே பெருமையளிப்பதாகும் என்றும் தன் வரவேற்புரையில் திரு. மகாலிங்கம் கூறினர். மேலும் அவர் கூறுகையில், இன்று உத்தரட்டாதி நக்ஷத்திரம் என்றும், திரு. கி. வா. ஜ வின் ஆசானன டாக்டர் ஐயரவர்களின் ஜன்ம நக்ஷத்திரமும் உத்திரட்டாதி இன்றைக்கு. இன்றைக்கு அவரை நாம் கௌரவிப்பது அவரை அவர் குருவை கௌரவிப்பது போலாகும் என்றும் அவர் கூறினர்.

மதுரை பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனர் துவக்க உரை நிகழ்த்திப்

(2-ம் பக்கம் பார்க்க)

## பம்பாயும், ஹானேயும்

பம்பாய், ஜூலை 12

வடவியட்னும் தலைநகர் ஹானேயைப் போலவே, மகாராஷ்டிர தலைநகர் பம்பாயும் ஓரளவு காலிசெய்யப்படக்கூடும் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க குண்டுவீச்சைத் தொடர்ந்து ஹானேய் நகரில் பாதிக்கு மேற்பட்ட மக்கள் ஏற்கனவே வேறிடங்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டார்கள்.

வரட்சி காரணமாக தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால், தொழில் நிறுவனங்களும், பாடசாலைகளும் மூடப்படவிருக்கின்றன. நகரை ஓரளவு காலி செய்யும் நடவடிக்கை குறித்து அரசாங்கமும், நகரநிர்வாகமும் ஆலோசனைகள் நடத்திவருகின்றன.

[illegible] தண்ணீர் விநியோகத்துக்கான நேரம் குறைக்கப்பட்டு விட்டது.

பம்பாய், இந்தியாவின் இரண்டாவது பெரிய நகரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பணத்துக்காகவும், பதவிக்காகவும், மனைவி மக்களுக்காகவும், லாட்டரியில் பணம் கிடைப்பதற்காகவும் பிரார்த்தனை செய்யாதே. இவையெல்லாம் மிக அற்பமானவை. உன்னைக் கீழே இறக்கிவிடும். ஆண்டவன் தரிசனம் கிடைக்க வேண்டுமென்றும் பக்தியும் தெய்வானுபூதியும் பேரானந்தமும் கிடைக்கவேண்டுமென்றும் பிரார்த்தனை செய்.

— சுவாமி சிவானந்தர்

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna Telephone : 389

ஈழநாடு ... பராபவ ஆண்டு ஆனி மீ 29 (13-7-66)

# நீதியரசரின் வேதனை

நீதியரசர் தம்பையா அவர்கள் வண்ணை வைதீச்வரர் கோவிலில் ஒரு கூட்டத்துக்கு தலைமைதாங்கிப்பேசுகையில், யாழ்ப்பாணத்திலுள்ள இன்றைய சமூகத்தீமைகளைப் பற்றி மிக வேதனைப்பட்டுப்பேசினார். இங்கு மதுபானம் பெருகி தெருச் சண்டைகள் அதிகரித்துவிட்டதாயும், தினசரி கொலை, கொள்ளை முதலிய குற்றங்கள் நடைபெறுவதாகவும், இந்நிலைமாற சமூக நன்மையில் அக்கறை உள்ளவர்கள் அனைவரும் கூடிய முயற்சி செய்ய வேண்டுமென்றும் சரியாக அறிவுறுத்தினார்.

நமது சமயம், இலக்கியம் முதலியவற்றைக் குறித்து நாம்பெருமை கொள்ளுகின்றோம். திருவள்ளுவர் விழாக்களையும், திருக்குறள் விழாக்களையும் நடாத்துகின்றோம். குடியால் வரும் கேட்டைப் பற்றி வள்ளுவப் பெருந்தகை இடித்து இடித்துக் கூறியிருப்பினும், அதைப் பற்றிப்பேசவும் தமிழ்த் தலைவர்கள் பலர் முன்வரத் தயங்குகிறார்கள். மரவரி முறையால் வடபகுதியிலே குடி அதிகரித்து பல குடும்பங்கள் குட்டிச்சுவராகின்றன. குற்றங்கள் பெருகுகின்றன. முதலில் விளையாட்டாக ஏற்படும் பழக்கம் பின்னர் வினையில் முடிகிறது. அந்தப்பழக்கத்துக்கு அடிமையானவர்கள் எப்படித் தேகசுகமும் தன்மானமும் கெட்டு, பின்னர் அந்தப் பழக்கத்தை விடமுடியாமல் தவிக்கின்றார்கள் என்பதெல்லாம் பகிரங்க ரகசியம். அப்படி இருந்தும் நம்சமூகத் தலைவர்கள் இதுபற்றிஏன் எவ்வித முயற்சியும் எடுப்பதில்லை?

மகாத்மா காந்தி தேச நிர்மாணத் திட்டத்திலே மதுவிலக்குக்குமிகமுக்கிய இடம் கொடுத்தார். மதுபானக்கடை மறியலை நடத்தினார். நாடு அரசியல் விடுதலை பெற்றதும் முதல்வேலையாக மதுவிலக்குக் கொள்கையை அமுல் செய்யச் செய்தார். அரசாங்க வருமானம் பெரிதும் குறைவதாக இருப்பினும் கூட. பூரண மதுவிலக்குக் கொள்கையை அரசியல் அமைப்புத் திட்டத்திலேயே சேர்க்கச் செய்தார். ஆனால் இலங்கையிலோ, அதிலும் தமிழ்ப்பகுதிகளிலோ, குடி வர வர அதிகரிக்கிறதே யன்றி குறைவதாகக் காணோம். இதன் தீங்கை அறிந்தும், தமிழ்த் தலைவர்களில் பலரும் ஏன் பேசாமல் மௌனம் சாதித்து வருகின்றார்கள்? அரசியல் முதலிய சுயநல நோக்கமா? எதுவாயினும் சரி, நம் சமூகத்தை நாசப்படுத்தி வரும் ஒரு தீமையை ஒழிக்க இனி எல்லா முயற்சிகளும்செய்யப்படவேண்டிய தவசியமாகும்.

யாழ்ப்பாணப் பகுதியிலே தேசிய மதுவிலக்குச் சங்கத்தைச் சேர்ந்த இருவர், புகைப்பதாலும் குடிப்பதாலும் ஏற்படும் ஆபத்தை சினிமாப் படங்கள்மூலம் விளக்கி, பள்ளிக்கூடங்களிலும், பொது இடங்களிலும் பிரசாரம் செய்வதாக ஒரு செய்தி கூறுகிறது. இது வரவேற்கத் தக்கதே. என்றாலும் சமூகத்திலே வேரூன்றிவிட்ட இந்தத் தீமையைக் களைய இவ்வித பிரசாரம் மட்டும் போதா. தெருவுக்குத் தெரு, மரத்துக்கு மரம் மதுபானம் சுலபமாகக் கிடைக்கையில், இப்பழக்கம் பெண்கள், மாணவர்களிடையிலும் பரவி வருவதில் வியப்பில்லை. குடியரக்கனை எதிர்த்து நடத்தும் போர் மிகக் கடினமானது. அரசாங்கம், அரசியல் கட்சிகள், சமய சமூக ஸ்தாபனங்கள், பொதுமக்கள் எல்லாருடைய ஒத்துழைப்பும் இதற்குத் தேவையாகும்.

ஆங்காங்கே சமய ஆதீனங்கள் ஏற்பட்டு, கதாப்பிரசங்கம் முதலியன வாயிலாக இத்தீமைகளை ஒழிக்க தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றார் நீதியரசர். எல்லாச் சமயங்களும் மக்களின் வாழ்க்கையைப் புனிதமாக்கி, அவர்களுக்கு மேலான நன்மை பயக்கவேண்டுமென்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. மதுபானத்தை எல்லாச் சமயங்களும் கண்டிக்கின்றன. ஆகவே இவ்விஷயத்தில் எல்லாச் சமய ஸ்தாபனங்களும் ஒத்துழைக்க அதிகஇடமுண்டு.

பல சமய குருமார்களும் சேர்ந்து இங்கு மகாநாடு கூட்டினர். பலரும் பேசினர். ஆனால் அது வெறும் பேச்சுடன் நின்றுவிட்டதென்றே அஞ்சுகிறோம். மதுவிலக்கு, குற்றங்கள் குறைப்பு முதலிய பொது விஷயங்களில், சர்வசமயத் தலைவர்களும் ஒருதிட்டமமைத்து, அதைத் தீவிரமாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். சமயத் தலைவர்கள் அனைவரும் இவ்விதம் சேர்ந்து முயற்சித்தால், அது நல்லபயன் அளிக்கக்கூடும். கட்சி நலனைவிட சமூகநலனே அதிக முக்கியமாதலால், பல கட்சிகளும், எம். பி. மார்களும், இவ்விஷயத்தில் விசேஷ சிரத்தை எடுக்கவேண்டியது அவர்களது புனித கடமை. இங்குள்ள பல சமயத் தலைவர்களும், அரசியல், சமூகத் தலைவர்களும், கூடுமானவரை ஒத்துழைத்து, சிறப்பாக யாழ்ப்பாணத்திலே சமூகத்தில் வளர்ந்துள்ள தீமைகளை நீக்கவும் மக்கள் வாழ்வு சீரடைந்து சமூகம் உண்மையில் முன்னேறவும் வழிசெய்ய வேண்டும். செய்வார்களா?

# தென்மராட்சி மேற்கில் திருமுறை விழா

கைதடி, செவ்வாய்

தென்மராட்சி மேற்கு திருஞானசம்பந்தர் சபையினர் திருமுறை விழாவை இம்மாதம் 24, 25ந் தேதிகளில் சிறப்பாகக் கொண்டாட முடிவுசெய்துள்ளனர்.

24ந் தேதியன்று விழா கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாசாலையிலும், 25ந் தேதி தனங்கிளப்பு குருசாமி வித்தியாசாலையிலும் நடைபெறும்.

முதலாவது நாள் நடைபெறும் பெருமிழலைக் குறும்பநாயனார் அரங்கு நிகழ்ச்சிகளில் தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. சிதம்பரப்பிள்ளை, இ. வைத்திலிங்கம் (பொறியியலாளர்), வித்துவான் க. கணபதிப்பிள்ளை, பண்டிதை செல்வி தவமலர் சின்னத்துரை ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இரண்டாவது நாள் நடைபெறும் சுந்தரமூர்த்தி நாயனார் அரங்கில் திருவாளர்கள் சி. உ. சோமசேகரம், பொ. நமசிவாயம், இ. வேலாயுதர், சி. சரவணமுத்து, வித்துவான் மு. சபாரத்தினம், செல்வன் செ. அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

திருமுறை மனனம், பேச்சுப்போட்டிகளில் பரிசுபெற்றோருக்குச் சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் பரிசில்கள் வழங்குவார். இரு நாட்களும் விழா மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.

## மஹோற்சவம்

காரைநகர், புதன்

காரைநகர் அரசடிக்காடு கதிர்காமசுவாமி மஹோற்சவம் இம்மாதம் 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாக இருக்கிறது. தொடர்ந்து பதினேழு நாட்கள் திருவிழா நடைபெறும். 15-ம் நாள் இரதோற்சவமும் 16-ம் நாள் தீர்த்தோற்சவமும், 17-ம் நாள் சங்காபிஷேகமும் அன்னதானமும் இடம்பெறும்.

ஆசிரியருக்குக் கடிதம்

## உண்மையில்லை

தங்கள் 10-7-66-ந்திகதி இதழில் ''சாவகச்சேரி நகரசபை தலைவரைப் பதவி நீக்கம் செய்க'' என்ற தலைப்பில் சாவகச்சேரி நகரசபையின் நான்கு அங்கத்தவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் கூறப்பட்டவை யாவும் உண்மைக்கு முரணானவை.

கூட்டங்கள் கூட்டும்படியாக கோரிக்கைகள் வந்த சமயத்தில் அக்கோரிக்கைகள் கூட்டங்களுக்கு விடப்பட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டனவென்பதை வற்புறுத்துகின்றேன். சில தீர்மானங்களுக்கு மகஜரில் கையொப்பமிட்ட அங்கத்தவர்களும் ஏகமனதாக உடந்தையாயிருந்தார்களென்பதையும் அறியத்தருகின்றேன்.

தலைவர் ஒருகாலமும் சட்டவிதிகளுக்கு மாறாக எந்தப் பணத்தையும் செலவுசெய்யவில்லை இன்னும் மகஜரில் கூறப்பட்ட மற்றவை யாவும் உண்மையற்றதென்பதை அறியத் தருகிறேன். பொதுமக்கள் யாராயினும் கூட்ட அறிக்கைகளை இக்காரியாலயத்தில் வந்து உண்மையைப் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

இ. ... நகரசபைத் தலைவர் சாவகச்சேரி.

## 15,000 இளைஞர்க்கு வேலை வாய்ப்பு

### காணி அமைச்சின் திட்டம்

கொழும்பு, புதன்

புதிய விவசாய அபிவிருத்தித்திட்ட மொன்றின் கீழ் ஏறத்தாழ 15,000 இளைஞர்கள் குடியிருத்தப்படுவரென்று தெரிகிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும் வகையில் காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா அளித்துள்ள ஓர் உத்தரவின் கீழ் தான் இத்திட்டம் தொடக்கப்படவிருக்கின்றது.

ஏற்கனவே 35 இளைஞர் குடியிருப்புத்திட்டங்கள் ஏற்படுத்தப் பட்டாகியுள்ளன எனகாணி அமைச்சு வட்டாரங்கள் கூறுகின்றன

## வங்கி வேலை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலை நிறுத்தம் இன்றுடன் 12-வது நாளை எட்டிப்பிடிக்கிறது.

இது இப்படியிருக்க, ஒரு ஸ்தாபனத்தில் எந்த ஊழியருக்கும் பதவி உயர்வு அளிப்பது குறிப்பிட்ட ஸ்தாபனத்தின் விருப்பத்தைப் பொறுத்தே இருக்கிறது என்றும் அது முற்றிலும் நிர்வாகத்தின் கையிலேயே உண்டு என்றும், அதுவிஷயமாக எந்த தொழிற்சங்கமோ அன்றி தொழில் தகராறு ஸ்தாபனமோ வற்புறுத்த முடியாது எனவும் இந்திய சுப்ரீம்கோர்ட், புறூக் பொண்ட் ஸ்தாபனத்துக்கும், அதன் தொழிலாளருக்குமிடையேயான வழக்கில் தீர்ப்பு வழங்கியது என்பதை தொழில் இலாகா அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளது- இந்தியாவின் பிரதம நீதியரசர் தலைமையில் ஐந்து நீதியரசர் குழுவே இந்த தீர்ப்பை வழங்கியது என்பதையும் தொழில் இலாகா அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

றோயல் கமிஷன் நியமிக்கப்படவிருப்பதைத் தொடர்ந்து வேலைநிறுத்தம் முடிவடையலாம் என வங்கி ஊழியர் சங்கங்களுடன் நெருங்கிய தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(5-ம் கலத் தொடர்ச்சி)

மிக்க ஒருவர், இங்கு சைவ சமய சேவைக்கு முழு நேர ஊழியராகக் கிடைப்பது பெரிய காரியம். நல்லூரிலே ஏற்கனவேவுள்ள ஒரு மடத்தை, ஞானசம்பந்தர் பெயரால் அளிக்க ஒரு புண்ணியவான் முன்வந்துள்ளாராம். மதுரையிலிருந்து திரும்பியபின், நல்லூரில் ஆதீன கிளை மடாலயத்தை அமைத்து, ''திருஞானசம்பந்தர் பாதமலர்தலைக் கொண்டு திருத்தொண்டு பரவ''ப்போவதாகத் தெரிவித்தார் பாகவதரவர்கள். வாழ்க பாகவதரும் அவரது சமயத் தொண்டும். மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

ஃ ஃ ஃ

வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத,
சீதவளவயற் புகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

—சேக்கிழார் நாயனார்

# ஐயாறன் எழுதுவது

ஒரு முக்கியமான செய்தி என்ன தெரியுமா? கதாப்பிரசங்கத்தில் முதல்வராக விளங்கும் நமது வண்ணை முத்தமிழ்மணி ஸ்ரீ மணி பாகவதர் துறவியாகப் போகிறார். அடுத்த ஞாயிறன்று மதுரைக்குப் புறப்பட்டுச் சென்று திருஞானசம்பந்தர் ஆதீன மகாசன்னிதானத்திடம் காஷாயம் பெற்று இங்கு திரும்பி வந்து சமயத்தொண்டுக்காகத் தமது வாழ்வை அர்ப்பணிக்கப் போவதாக அவரே சென்ற திங்களன்று வண்ணை சிவன்கோவிலில், பாரதக்கதை பூர்த்திவிழாவில், மிக உருக்கமாகத் தெரிவித்தார்.

இரண்டு வருடங்களுக்கு மேலாகவே அவருக்கு இந்த எண்ணம் இருந்துவந்துள்ளதாம். மதுரை மகாசன்னிதானமும் இதற்குச் சம்மதம் தெரிவித்துவிட்டார். அவரிடம்தான் சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியாரும் (பெரியபுராண விரிவுரை ஆசிரியர்) காஷாயம் பெற்றாரென்பது குறிப்பிடத்தக்கது.

மதுரையிலிருந்து திரும்பும்போது பாகவதரின் பெயரும், தோற்றமும் மாறிவிடும். துறவு கோலத்துடன் திரும்புகையில், இலங்கையில் விடமாட்டோமென்றும், பாஸ்போர்ட் போட்டோவில் உள்ளதுபோல் இல்லை என்றும் நமது இமிகிரேஷன் அதிகாரிகள் மறுத்துவிட்டால் என்ன செய்வது? அதற்காக முன் கூட்டியே மேலதிகாரியைப் பார்த்து ''இவர் குருவாகி கோலம், பெயர் மாறி வந்தாலும் இலங்கை திரும்பத் தடையிராது'' என்று அதிகாரியிடம் அதிகாரபூர்வமாக எழுதி வாங்கிக்கொண்டே செல்லுகின்றார்!

ஃ ஃ ஃ

பாகவதர் துறவியானபின் கதை செய்வாரா? அல்லது விட்டுவிடுவாரா? துறவிகள் கதாகாலட்சேபம் செய்து பணம் பெறலாமா? என்ற கேள்விகள் அதற்குள் எழுந்துவிட்டனவாம். இக்கேள்விகளுக்கான பதிலையும் பாகவதர் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிவித்தார்.

''துறவியாக வந்த பின்னும் உயிருள்ளவரை கதாகாலட்சேபம் செய்தே வருவேன்'' என்றார். ஸ்ரீ கிருபானந்தவாரியார் காசிக்குச் சென்று திரும்பியதும், கதாகாலட்சேபத்துக்குப் பணம் வாங்குவதில்லையென்று மதுரை சன்னிதானத்திடம் ஒரு விரதம் எடுத்தாராம். ஆனால் இப்பொழுதும் பணம் கொடுக்கிறார்கள் என்றாலும் அவை அனைத்தையும் திருப்பணி முதலிய தர்ம கைங்கரியங்களுக்கும், மாணவர்களுக்கு உதவி அளிப்பதற்குமே செலவிடுகிறாரேயன்றி தமக்காக அதில் ஒருசதமும் எடுப்பதில்லை என்று அறிந்தேன்.

மணிபாகவதர் இதுவரை கதைக்குப் பணம் இவ்வளவுதான் வேண்டுமென்று கேட்பதில்லையாம். யாரும் கொடுத்ததை வாங்கி வந்ததாயும், பல இடங்களில் இலவசமாகவே செய்து வந்ததாயும் தெரிவித்தார். துறவியானபின்னும், வாரியார் அவர்களைப் பின்பற்றி, இதன்மூலம் கிடைக்கும் பணத்தை இங்கு எவ்வளவோ தர்மங்களுக்குப் பயன்படுத்தலாம்.

ஃ ஃ ஃ

சமய அறிவும், பேச்சுவன்மையும், கலைத்திறனும்

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே பாடசாலையிலேயே சகல போதனைகளும் இருக்கவேண்டும்

## உத்தேச கல்விமுறை குறித்து அதிபர்கள் சங்க தலைவர் கருத்து



யாழ்ப்பாணம், புதன்

''மாணவர்களை, கனிஷ்ட வகுப்பின் பின்னர் அவரவர் திறமைக்கும் தகுதிக்கு மேற்ப தொழிற் கல்விக்கும் உயர் கல்விக்குமென பிரித்து வெவ்வேறு பாடசாலைகளுக்கும் அனுப்புவதைவிட, ஒரே பாடசாலையில் சகல போதனை முறை வசதிகளும் செய்வதால் கூடிய பலன் அடைய முடியும். இந்த முறையே மேற்கு நாடுகளில் பெரும் வெற்றியை அளித்துள்ளது''

இவ்வாறு வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அதன் தலைவர் திரு. ச. அம்பிகைபாகன் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

''உயர் கல்வி சம்பந்தமாக உத்தேச அபிவிருத்தி திட்டங்கள் பற்றி நாம் ஆச்சரியப்பட வேண்டியுள்ளது. பல்கலைக்கழகச் சபைகளையும், உபவேந்தரையும் நியமிப்பது குறித்து அரசியல் அதிகாரம் பயன்படுத்தப் படவிருப்பதை நாம் ஆட்சேபிக்கிறோம்'' என்று அவர் மேலும் குறிப்பிட்டார். தற்காலிக அதிபர்களை நிரந்தரமாக்குமாறும், பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் காலி ஸ்தானங்களை நிரப்புமாறும் எம். பி.க்கள், கல்வி டைரக்டர், மந்திரி ஆகியோரிடம் கோரியுள்ளது பற்றியும் தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

மேற்குறிப்பிட்ட விவகாரங்கள் உடனடியாக தீர்த்து வைக்கப்படாவிடில் பாடசாலைகளின் கல்வி நிலைமை குன்றி விடும் என்பதையும் பாடசாலைகளுக்குத் தேவையான விஞ்ஞான கூட மற்றும் உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திரு. அம்பிகைபாகன் தமது தலைமையுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

பாடசாலை உபகரணங்களை பாடசாலைகள் கஷ்டமின்றிப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக மாவட்ட உபகரண சாலைகள் நிறுவப்பட வேண்டும். இல்லாவிடில் இவற்றைப் பாடசாலைகளே வாங்குவதற்கு நிதியளிக்கப் படவேண்டும்.

### பரீட்சைப் பகுதியின் பொறுப்பு

ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சைக்கு ஒன்றும், ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சைக்கு ஒன்றுமாக பொதுமக்களும், பாடசாலைகளினது நம்பிக்கையைப் பெறக் கூடியதாக இரு சபைகள் நிறுவப்படவேண்டியது அவசியமாகும். கல்வி இலாகாவினதும், பல்கலைக்கழகத்தினதும் பரீட்சைகளை மட்டுமே பரீட்சை இலாகா நடாத்த வேண்டும், என்ற கல்விக் கமிஷனின் சிபாரிசை நாம் வரவேற்கிறோம். மற்றைய அரசாங்க இலாகாக்களின் பரீட்சைகளை நடத்த புறம்பான பகுதி ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஜி. சி. ஈ. சாதாரண, உயர்தர பரீட்சைகளின் பெறுபேறுகள் தாமதமாகி வருவதை தவிர்க்க முடியும்.

### ஆசிரியர் இடமாற்றம்

அடிக்கடி ஆசிரியர்களை இடமாற்றுவதை நமது சங்கம் கண்டிக்கிறது. இடமாற்றங்கள் அவசியமெனக் கருதப்பட்டால் பாடசாலை அதிபர்களின் ஆலோசனையுடனேயே அவ்விதம் செய்ய வேண்டும்.

வருட முதற்பகுதியி நடைபெறும் பெருந்தொகை ஆசிரியர்களின் இடமாற்றம் பாடசாலைகளைப் பெரிதும் பாதித்துள்ளது. ஆசிரியர் இடமாற்றங்களில் அரசியல் தலையீடு தவிர்க்கப்பட்டால்தான் பாடசாலைகளின் கல்வித்தரம் உயரமுடியும்.

### யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம்

நீடாம் குணவர்த்தனு கமிஷன்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகப் பிரிவு அமைக்கப்பட வேண்டும் என்பதை சிபாரிசு செய்துள்ளன. இலங்கைப் பல்கலைக்கழகத்தில்ஏற்பட்டு வரும் இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்கு யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகப் பிரிவு ஒன்று நிறுவப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகிறார். பிரபல கல்விமானும், தமிழ் அறிஞருமான சுவாமி விபுலானந்தரும் யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும் என்பதை 1927-ம் ஆண்டிலேயே வற்புறுத்தினர்.

---

## 'பொது மராமத்து இலாகாவின் ஊழல்'

### பிரதமர் குற்றச்சாட்டு

கொழும்பு, புதன்

'பொதுச் சேவையில் கைலஞ்சமும் ஊழலும் தலைவிரித்தடுகின்றன. இந்த வகையில் பொது மாரமத்து இலாகாவும் வேறெதற்கும் சளைத்ததல்ல.

பொதுமராமத்து இலாகாவின் உயர்தர அதிகாரிகள் சமுகமளித்திருந்த ஓர் கூட்டத்தில் பேசும் போது பிரதமர் டட்லி சேனநாயக்கா மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: ''நான் அண்மையில் எனது தொகுதிக்கு விஜயம் செய்தபின், மூன்று நாட்களுக்கு எனது காரை கராஜில் விடவேண்டியிருந்தது. பொது மராமத்து இலாகாவின் பொறுப்பிலுள்ள எனது தொகுதி ரோட்டு அவ்வளவு மோசம்'' ——

### புதிய நெசவு நிலையம்

மன்னர், புதன்

மன்னாரிலிருந்து 86 மைல் தொலைவிலுள்ள வவுனிக்குளக் குடியிருப்பில், ஓர் புதிய நெசவு நிலையம் திறக்கப்படவிருக்கிறது. அதற்கான அத்திவாரக்கல்லை மன்னார் அரசாங்க அதிபர் திரு டி. நேசைா [illegible] நாட்டிவைத்தார்.

---

## 'ஆக்க இயல்புகளை வளர்க்கவும்'

திருக்கேதீச்சரம், செவ்.

'மாணவர்களுடைய ஆக்க இயல்புகளை வளர்ப்பதற்கும் மக்களுக்கு நல்ல சிந்தனைக் கருத்துக்களை எடுத்து விளக்குவதற்கும் இவ்வாறான நாடகப் போட்டிகள் பெரிதும் துணைபுரியும். அத்துடன் முத்தமிழில் சிறந்தஅம்சமான நாடகக்கலையை வளர்ப்பதன்மூலம் பண்டைத்தமிழ்வரலாற்றைவளர்க்க முடியும்' என்று அடம்பன் மகாவித்தியாலய நாடகப் போட்டி விழாவில் தலைமை தாங்கிய அதிபர் திரு. இரஜ சண்முகரத்தினம் கூறினர்.

இவ்விழாவினை துவக்கி வைத்து உரையாற்றிய மன்னார் தலைமைக் காரியாலய காரியாதிகாரி திரு த வாமதேவன் 'நாட்டுக்கூத்துப் போன்ற பழந்தமிழ் நாடகப் பாணியை பேணிக்காத்தல் அவசியம் என எடுத்துரைத்தார்

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் 'கல்லூரிகளும் கலைமன்றங்களும் நாடகக் கலையை வளர்ப்பதில் உற்சாகம் காட்டுவது மகிழ்ச்சிக்குரியதெனவும் இவ்வகையான நாடக விழாக்கள் மூலம் வித்தியாலயம் நிதி திரட்டி விஞ்ஞானகூடம்' நூல்நிலையம், போன்றவைகளை அமைக்க முயற்சித்தல் வேண்டுமெனவும் ஆலோசனை கூறினர்.

---

## "பின்பக்கத்தால் வந்து . . .

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ட்டு ஓடிவிட்டார். முதலில் எதிரியைப்பார்க்கும் போது 31 அடி தூரத்தில் வந்தார் லகயில் பொல்லுடன் எதிரி வந்தார். அடிக்கும் போது எதிரி ஒன்றும் கூறவில்லை. வலதுகையால் பொல்லை மேலே தூக்கி இரு தடவை அடித்தார். அடி பிடரியில் விழுந்தது, ஒன்றுக்குப் பின் ஒன்றாக அடித்தார் எதிரியை நானும் ஞானசேகரமும் துரத்திச் சென்றோம். அவர் சகோதரியின் வளவிற்குள் சென்றுவிட்டார்- நாங்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு திரும்பி வந்தோம். கந்தையாவின் மடியில் இறந்தவர் படுத்திருந்தார். இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது. அடிவிழுந்த இடத்தில்தான், இறந்தவர் விழுந்துகிடந்தார். இறந்தவரை முதலில் காரில் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றோம் அங்கிருந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம். ஞானசேகரமும், கந்தையாவும் வந்தார்கள். இறந்தவர் காரில் எனது மடியில் படுத்திருந்தார். நான் பொலிஸ் நிலையத்தில் கீழே இறங்கவில்லை சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு திரும்பிவந்தேன். வாக்குமூலத்தை கொடுக்கவில்லை. பொலிஸார் சம்பவம்நடந்த இடத்திற்கு சென்றுவிட்டதாக கூறினர்கள் சம்பவம் நடந்தஇடத்திற்கு வந்து இரவு 10 மணியளவில் பொலிஸாருக்கு வாக்குமூலமளித்தேன்சம்பவம் நடந்த போது பொழுதுபடவில்லை. அந்தவெளிச்சத்தைக் கொண்டுஎதிரியை அடையாளம் கண்டேன் சம்பவம் நடந்த இடத்திற்கு சனசமூக நிலையத்தில் தொங்கவிடப்பட்டிருந்த பெட்ரோல் மாக்ஸ் வெளிச்சமும் இருந்தது. எதிரியை நீண்டகாலமாகத் தெரியும்.

எதிரியின் வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் குறுக்கு விசாரணை செய்த போது சாட்சி கூறியதாவது: சனசமூகநிலையம்ஆரம்பித்தநாள் எனக்குத் தெரியாது- வருடாந்த பொதுக் கூட்டம் 64-ம் ஆண்டு ஜனவரிமாதம் நடந்தது. அதற்கு முன் எப்பொழுது நடந்ததென்று ஞாபகமில்லை. சனசமூக நிலையம் இப்பொழுது சீராக நடைபெறவில்லை, உடுவில் கிராமசபையின்கீழ்தான் சனசமூக நிலையம் நடைபெற்று வந்தது கிராமச் சங்கத் தலைவருக்கு நிகழ்ச்சிக்குறிப்புக்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பது எனக்குத்தெரியும்.

வழ: எப்பொழுதாவது நிகழ்ச்சிக்குறிப்புகளைச் சமர்ப்பித்திரா?-இல்லை.

வழ: நல்லமுறையில் சனசமூகநிலையம் நடந்தால்நன்கொடைப் பணம் கிடைக்கும்?-ஆம்.

வழ: எப்பொழுதாவது நன்கொடைப்பணம் பெற்றீரா?-இல்லை.

வழ: நன்கொடைப்பணம் பெற விண்ணப்பம் செய்தீரா?-இல்லை.

வழ: நீர் காரியதரிசியாக இருக்கவில்லை; அதனால்தான் நன்கொடைப்பணம் பெறவில்லை?-இல்லை.

வழ: 64ம்ஆண்டுசனசமூக நிலையத்தின் தலைவராகஇருந்தவர் எதிரி?-இல்லை.

வழ: 61-ம் ஆண்டு முதல் சனசமூகநிலையம் நடாத்தப் படவில்லை; 64-ல் எதிரிதான் ஆரம்பிக்கத் தொடங்கினர்?-இல்லை.

வழ: உடுவில் கிராமசபை 64-ம் ஆண்டு எதிரிக்கு நன்கொடைப்பணம் கொடுத்தது தெரியுமா?-இல்லை.

வழ: சம்பவம் நடந்த தினம் எதற்காக கூட்டம் வைத்தீர்கள்?-எதிரியை விலக்குவது பற்றியும், உதவிப் பணம் பெறுவது பற்றியும் ஆலோசிக்க.

வழ: 65ம் ஆண்டு தைமாதம் புதிய கமிட்டி தெரிவு நடைபெற்றத?-ஆம்.

வழ: கந்தையா புதிய தனாதிகாரியாக தெரிவுசெய்யப்பட்டார்?-ஆம்.

வழ: அப்படியானால் எதற்காக பெப்ரவரிமாதம் எதிரியை விலக்குவதற்கு கூட்டம் கூடினீர்கள்?-

தடுமாற்றத்தால் அப்படிக் கூறினேன், பல கேள்விகள் ஒருதடவைகேட்டதால் தடுமாறினேன்.

வழ; நான் கேட்ட ஒரே கேள்விக்கு மூன்று பதிலளித்தீர். சம்பவம் நடந்த இடத்தில் நீர் இருக்காததனால் தான் தடுமாடுகிறீர். சம்பவம் நடந்த இடத்தில் இருந்த பெற்றோமாக்ஸ் விளக்கு எங்கே?—எதிரியைத் துரத்திச்சென்றுவிட்டபின் திரும்பிவந்தபோதுகாணவில்லை.

வழ: அது யாருடையது?—சனசமூக நிலையத்திற்குச் சொந்தமானது,

வழ: வழக்கமாக விளக்கை எங்கே வைப்பது?எனது வீட்டில்.

வழ; அச்சமயம் உண்மையில் பெற்றோமாக்ஸ் இருக்கவில்லை?—இருந்தது.

வழ; எதிரி பொல்லுடன் வரும்போது கந்தையாவுடன் கதைத்துக்கொண்டிருந்தீர்?—ஆம்.

வழ: எதிரி வந்ததுபற்றி கந்தையாவிற்கு கூறினீரா? இல்லை.

வழ: எதிரி பொல்லுடன் வருவதை சொன்னீரா— இல்லை

விசாரணை இன்று காலை 9-15 மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

---

### சவாரிப் போட்டி

கைதடி, செவ்வாய்

கைதடி மேற்கு ஞானவயிரவர் கோவிலடியில் இம் மாதம் 16ந் திகதி சனிக்கிழமை மாலை 2 மணியளவில் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி ஒன்று நடைபெறும்.

---

# கொலை, கொள்ளை, குடி, சண்டை!

## யாழ்ப்பாண நிலைபற்றி நீதியரசர் வேதனை

யாழ்ப்பாணம், புதன்

''யாழ்ப்பாணத்திலே நாளைக்கு ஒரு கொலை, கொள்ளை முதலியன நடக்கின்றன. குடி பெருகிக் குற்றங்கள் அதிகரிக்கின்றன. வழியில் வருகையில் இருவருக்குப் பலத்த சண்டை. யாழ்ப்பாணத்தில் பிறந்த எனக்கு இந்நிலையைக் காண மிக வேதனையாகவுள்ளது.''

என்றிவ்வாறு நீதியரசர் எச். டபிள்யு. தம்பையா நேற்று மாலை வண்ணை வைத்தீஸ்வர ஆலய முன்றலில் ஸ்ரீ மணிபாகவதரின் பாரத கதாகாலட்சேபப் பூர்த்திவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது: ''இங்கு இந்த அவல நிலை மாற ஆங்காங்கே ஆதீன குருபீடங்கள் ஏற்படவேண்டும். ஸ்ரீ மணிபாகவதர் சீக்கிரத்தில் துறவியாகி, நல்லூரில் ஓர் ஆதீனம் அமைக்கவிருப்பதை அறிய மகிழ்ச்சியடைகின்றேன். கல்வி, கலை, நல்ல சாரீரம், நற்பண்பு எல்லாம் அமையப்பெற்ற பாகவதர் கதாகாலட்சேபத்தின்மூலம் மக்கள் மனதில் நல்ல கருத்துக்களைப் புகுத்தி, சமூக சீர்திருத்தத்துக்கு நல்ல தொண்டு செய்வாரென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன். தமிழிலே தெய்வீக அருட்பாக்கள் அதிகம் [illegible] வாழ்கிறது [illegible] அதற்குப் பெருமையுமாகும். தினசரி காலையில் இரு தேவாரப் பதிகங்களை ஒருவர் பக்தியுடன் பாடினால், அன்று அவர் வாழ்க்கையே தூய்மையாகும். தமிழர்கள், இவ்வித தமிழ்ச்செல்வங்களைப் பயன்படுத்தி, வாழ்க்கையில் மேன்மையடைய வேண்டும்'' என்றார்.

திரு. கே. பி. ஹரனும், ஸ்ரீபாகவதரைப் பாராட்டிப் பேசினர். ஸ்ரீ மணிபாகவதர் பாரதக்கதையைப் பூர்த்தி செய் பேசுகையில், தாம் அடுத்த வாரம் மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்தர் ஆதீனத்துக்குச் சென்று, அங்கு மகாசந்நிதானத்திடம் காஷாயம் பெற்று துறவிஆகி நல்லூரிலே, அந்த ஆதீனத்தின் கிளையை அமைத்து சைவத்தொண்டு செய்ய உத்தேசித்திருப்பதாயும் துறவியான பின்னரும் கதாகாலட்சேபப்பணியைக் கடைசிவரை செய்ய வேண்டுமென் தேதம் அவா என்றும் தெரிவித்தார்.

கோவில் தர்மகர்த்தா, நீதியரசருக்கும், ஸ்ரீ பாகவதருக்கும் மலர்மாலை சூட்டி வரவேற்றுக் கௌரவித்தார். சுமார் ஒன்றரை வருடகாலமாக பாரதக் கதையை பிரதிவெள்ளிக் கிழமைகளிலும் திருவிழாக்களிலும் ஞானயக்ஞமாக ஸ்ரீபாகவதர் செய்துவந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. ஏராளமான மக்கள் கேட்டு ரஸித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழக்கம் வந்த விதம்

இரவில், அல்லது பகலிலுமகூட, சோறு கறி முதலிய உணவு வகைகளை எடுத்துச் செல்பவர்கள் கூடவே ஒரு சிறு கரித்துண்டையும் உணவுப் பெட்டிக்குள் வைத்துக் கொண்டு போகும் வழக்கம் நம்நாட்டில் பல இடங்களிலும் காணப்படுகிறது. எதற்காக கரித்துண்டையும் எடுத்துச் செல்ல வேண்டுமென்று அவர்களுக்கு அநேகமாகத் தெரியமாட்டாது. வழியில் சாப்பாட்டின் மோப்பம் பிடித்து பேய் பிசாசுகள்பின்னுல் தொடருமென்று சிலர் காரணம் கூறுவார்கள். அப்படிச் சொன்னுல்தானேசாப்பாடு கொண்டுபோகிறவர்கள் பயத்தின் நிமித்தமாவது கரித்துண்டையும் கொண்டு போவார்கள்? இல்லாவிட்டால் சாப்பாட்டிற்குள் அடுப்புக் கரியைப் போட ஒப்புக் கொள்வார்களா?

கரித்துண்டு போடுவதற்கு உண்மையான காரணம் வேறு, காற்றில் கலந்துள்ள நச்சுத்தன்மையுள்ள வாயுக்களை உறிஞ்சி எடுத்துவிடும் தன்மை கரிக்குண்டு. இந்த விஞ்ஞான உண்மையை தமது முன்னேர்கள் மேனுட்டு விஞ்ஞானப் படிப்பு நம்நாட்டில் இறக்குமதியாவதற்கு முன்னமேயே கண்டு பிடித்துவிட்டார்கள். உண்மையான காரணத்தை கூறினுல் சனங்கள் அதை நம்பமாட்டார்கள். அன்றியும் கரித்துண்டை சாப்பாட்டுக்குள் போடுவதற்கு அருசிப்பட்டு அஜாக்கிரதையாக இருந்துவிடுவார்கள். இதற்காகத்தான் பேய் பிசாசு பிடித்துவிடும் என்ற கட்டுக்கதை எழுந்தது.

கொள்ளிவாய்ப் பேய் என்ற ஒருவகைப் பிசாசு சுடலைகளில் வசிப்பதாக ஒரு நம்பிக்கை உண்டல்லவா? இது உண்மையில் பிசாசுதானு? சுடலைகளில் ஏதோ ஒரு மர்மமான வெளிச்சம் சுடர்விட்டு உலாவித் திரிவதை சிலர் கண்டு அஞ்சியிருக்கிருர்கள். இத்தோற்றத்துக்கு உண்மையான காரணம் வேறு.

சேறு சுரியுள்ள இடங்களில் 'மார்ஷ்காஸ்' என்ற ஒருவகை வாயு உற்பத்தி ா கிறது. இதில் நெருப்புப் பொறிபட்டால் சுடர்விட்டு எரியும். சுடலைகளின் பக்கமாக சகதிநிலம் இருந்தால் அதிலிருந்து புறப்படும்வாயு சுடலையில் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பில் மூண்டு எரியும். காற்ருேட்டத்துக்கு அது அங்குமிங்கும் ஒடித்திரியும்கொள்ளிவாய்ப் பிசாசாக மாறிவிடுகிறது.

தற்செயலாக எவராவது அதைச் சமீபத்தில் கண்டு பயப்பட்டு ஓட ஆரம்பித்தால், ஓடும் காருக்குப் பின்னுல் சருகு, புழுதி முதலியன அள்ளுப்படுவதுபோல், அவருக்குப் பின்னுல் அதுவும் தொடர்ந்து கலைப்பது போலத் தெரியும். எரிகின்ற வாயு சிலசமயம் ஓடுகிறவரின் ஆடைகளைப் பற்ற வைத்து விடுவதும் உண்டு!

(இலங்கையிலுள்ள விசித்திரமான பழக்க வழக்கங்களைப்பற்றியும் அவை தோன்றிய விதத்தைப்பற்றியும் நேயர்களிடமிருந்து கட்டுரைகள் வரவேற்கப்படும்.)

# அணுகுண்டு 'ஸ்கோர்'

இம்மாதம் 2-ம் திகதி தென்பசுபிக் சமுத்திரத்தில் பிரான்ஸ் வெடித்த அணுகுண்டுடன் இதுகாலவரை 543 அணுகுண்டுகள் இப்பூவுலகில வெடித்துள்ளன. இது உத்தியோகபூர்வமான செய்தி. உண்மையில் இதைவிட இன்னும் அதிகமான அணுகுண்டுகள் ஆகாயத்திலும் நிலத்துக்குக் கீழும் வெடிக்கப்பட்டிருக்கலாம்.

முதலாவது அணுகுண்டு 1945-ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் திகதி மெக்ஸிக்கோவில் அமெரிக்காவினுல் வெடிக்கப்பட்டது. இன்றுவரை அமெரிக்கா வெடித்த அணுகுண்டுகளின் தொகை 302. இதில் 2-வது உலகயுத்தத்தில் ஜப்பான் மீது வீசப்பட்ட இரண்டு குண்டுகளும் சேர்ந்துள்ளன.

சோவியத் யூனியன் 127 குண்டுகளை வெடித்திருக்கிறது. இது அமெரிக்காவின் எண்ணிக்கை. தொகை இன்னும் அதிகமாயிருக்கலாம். பிரிட்டன் 25 குண்டுகளை வெடித்திருக்கிறது. பிரான்ஸ் 6, சீஞ 3. பிரான்ஸ் சுமார் 15 அணுகுண்டுகளை வெடித்திருக்கிறது என்று சிலர் கூறுகிருர்கள். உண்மையான தொகை எவருக்குமேதெரியாது.

அடுத்த

**பஞ்சாமிர்தம்**

**29-7-66**

# மிருகலோக மர்மங்கள்

முதலை உண்மையில் கண்ணீர் வடிக்குமா?

குரங்கின் ஈரலைத் தின்பதற்கு ஆசைப்பட்ட மனைவியைத் திருப்தி செய்வதற்காக முதலையானது ஆற்றங்கரையிலிருந்து கொண்டு மரத்திலிருந்த குரங்கை நோக்கி அழுது கண்ணீர் வடித்து அதை நயவஞ்சகமாக ஏமாற்றி ஆற்றுக்குள் இழுத்துக்கொண்டு போனதாக கதையுண்டு. ஒருவரை ஏமாற்றுவதற்காக அவர் மீது வருந்துவதாக பாசாங்கு செய்வதை முதலைக்கண்ணீர் வடிக்கிறதென்று கூறுவோம்.

குரங்கைஏமாற்றியமுதலை கண்ணீர் வடித்தது உண்மையா? முதலைக்குக் கண்ணீர் வருமா?

ஆம், ஆனுல் ஏமாற்றும் அளவிற்கு அதற்கு புத்தி இல்லை, மனிதர் கொட்டாவி விடும்பொழுது கண்ணீர் வடிக்கிறதல்லவா? அது போலத்தான் முதலை தன் வாயை அகல விரித்து ஒரு மிருகத்தை விழுங்க முயலும்போது இயற்கையாகவே கண்ணீர் வடியும்.

மாடு குதிரை முதலியமிருகங்களுக்கு கண்ணீர் வடியும். ஆனுல் அது அவை அழுவதாலல்ல.

ஃ ஃ ஃ

யானை ஒருபோதும் மறப்பதில்லை என்பது உண்மையா?

இல்லை; ஆனுல் அதற்கு நல்ல ஞாபகசக்தி இருக்கிறது. மற்ற மிருகங்களைவிட அதிகமான ஞாபகம் அதற்குண்டு. தன் உடம்புக்கு ஏற்படும் காயங்களை அது நீண்டகாலம் நினைவில் வைத்திருக்கும். தனக்கு தீங்கு செய்த மனிதனைப் பலவருடங்களுக்குப்பின் காண நேர்ந்தாலும் அதற்கு பழைய ஞாபகம் வந்து அவனைத் தாக்க எத்தனிக்கும்.

ஃ ஃ ஃ

எல்லாப் பறவைகளும்கூடு கட்டுவதுண்டா?

இல்லை. சில கடற்பறவைகள் கடற்கரையிலுள்ள கூழாங்கற்களைக் காலால் கிளறிவிட்டு முட்டையிடும். குயில் ஒருபோதும் தானுகக் கூடுகட்டுவதில்லை. அடைகாப்பதுமில்லை. அந்தவேலைகளைக் காகமே அதற்கு செய்துகொடுத்துவிடும்.

ஃ ஃ ஃ

உலகில் வாழ்ந்த மிருகங்களில் மிகப் பெரியது எது?

அது இ பொழுதும் வாழ்ந்துகொண்டு தானிருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்துஇப்பொழுது மறைந்துபோன 'டினேசோர்' என்ற ஜந்துவேமிகப் பெரியது என்று சிலர் நினைக்கிருேம். அதன்நீளம் 90 அடி; நிறை 50 தொன். இன்றுவடதுருவக் கடல்களில் காணப்படும் நீலத் திமிங்கிலம் 100 அடி நீளத்துக்குமேல் வளரும்; நிறை 100 தொன்.

# பஞ்சாமிர்தம்

தயாரிப்பு:- வி. என். பி.

# தேர்தல் 'தில்லுமுல்லு'

இந்திய பொதுத்தேர்தல்களுக்கு இன்னும் சரியாக ஏழு மாதங்கள் இருக்கின்றன. இதற்குள் தேர்தல் காய்ச்சல் அங்கே பலமாக அடிக்கிறது. தென்னிந்தியாவில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து அண்ணுதுரையின் திராவிட முன்னேற்ற கழகமும், ராஜகோபாலாச்சாரியாரின் சுதந்திர கட்சியும், மூஸ்லீம் லீக்கும் தீவிரமாகப் பிரசாரம் செய்கின்றன. இவர்களோடு ம. பொ. சிவஞான கிராமணியாரும் சேர்ந்து கொண்டிருக்கிருர்.

திராவிட சுழகத்தின் தந்தையாகிய ஈ. வே. ரா. பெரியார் காங்கிரஸ் கட்சியையே ஆதரிக்கிருர்.

யமனை விழுங்கிப் பசியாறிய பழம் பெரும் புலிகள் தேர்தல் களத்தில் குதித்து சொற்போர் புரியும் போது மதி நுட்பம் மிக்க சாட்டையடிகளுக்கு கேட்க வேண்டுமா? சினிமா நட்சத்திரங்களும் தேர்தல் போராட்டத்தில் குதித்திருக்கிருர்கள் 'புரட்சி நடிகர்' எம். ஜி. ராமச்சந்திரனும், லட்சிய நடிகர் சென்னை சட்டசபை அங்கத்தவர் எஸ். எஸ் ராஜேந்திரனும் முழுக்க முழுக்க தி. மு. க. ஆதரவாளர்கள். இக் கழகத்தின் தூண்களான அண்ணுதுரையும் மு. கருணுநிதியும் சினிமாவுக்கு கதை வசனம் எழுதுபவர்கள்,

சினிமா படங்களுக்கு பாட்டு எழுதும் கவிஞர் கண்ணதாசன் காங்கிரஸ் கட்சியை பலமாக ஆதரிக்கிருர். சினிமா நடிகர் ரஞ்சனும் நடிகை பத்மினியும் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துகொண்டு பலமான பிரசாரம் செய்கிருர்கள்,

பத்மினியும் ரஞ்சனும் சினிமா சான்ஸ் இல்லாதபடியால் தான் காங்கிரஸ் சேர்ந்திருக்கிருர்கள் என்று தி. மு. க. பிரமுகர் ஒருவர் சமீபத்தில் கூறினுராம். இதற்கு காங்கிரஸ் மறுத்தான் வெடி போடுகிறது. எப்படியென்ருல், முன் பொருநாள் நாட்டில் கலவரங்கள் மிகுந்தால் இராணுவ ஆட்சி ஏற்படக் கூடும் என்று காங்கிரஸ் தலைவர் காமராஜர் கூறியிருந்ததை கேள்விப்பட்டவுடன் அண்ணுதுரை அப்படி நடந்தால் நான் உடனே சினிமாவுக்கு கதை, வசனம் எழுதப்போய் விடுவேன்' என்று சொன்னுராம். சினிமாவுக்கும் அரசியலுக்கும் எவ்வளவு சம்பந்தம் இருக்கிறது, பார்த்தீர்களா?

தி. மு. க. தலைவர் கருணுநிதி தஞ்சாவூரில் பேசும்போது 'எப்படி மலரிலிருந்து மணத்தைப் பிரிக்க முடியாதோ, எப்படி கனியிலிருந்த சுவையைப் பிரிக்க முடியாதோ, அப்படித்தான் அண்ணுவிடமிருந்து என்னைப் பிரிக்க முடியாது' என் கூறினுர். இதற்கு காங்கிரஸ்சார்புள்ள பத்திரிகை ஒன்று பதில் வேட்டு போட்டது. 'அண்ணுதுரைவெறும் மலர் நான் தான் மணம். அண்ணுதுரை வெறும் கனி; நான் தான் சுவை' என்ற கருத்தில் தான் கருணுநிதி பேசியிருக்கிருர் என்றது அப்பத்திரிகை.

'திருமணமான தம்பதிகள் குழந்தைகள் பெறுவது எப்படியோ, அதே போன்று தான் தி. மு. க. 1967-ல் மந்திரிசபை அமைக்கும்' என்று அண்ணுதுரை ஓரிடத்தில் பேசினுர். இதைக் குறித்து கண்ணதாசன் தேர்தல் கூட்டமொன்றில் பேசியபோது 'இந்த உவமானத்தைக் கூறியபோது அண்ணுதுரை, பாவம், தம்மையே மறந்து விட்டார்' என்று கிண்டல் செய்தார்.

சங்கதி என்னவென்ருல் அண்ணுதுரைக்கு நிஜவாழ்வில் குழந்தைகள் கிடையாது

# நாரத கர்வ பங்கம்

நாரத முனிவருக்கு இசையில் எவ்வளவு பாண்டித்தியம் இருந்ததோ அதற்கு மேல் அதையிட்டு அவருக்குக்கர்வம் அதிகமாயிருந்தது. தன்னைவிட சமர்த்தன் ஈரேழு புவனங்களிலும் இல்லையென்று மமதை கொண்டிருந்தார். இந்த அகம்பாவத்தை அடக்க வேண்டுமென்று தீர்மானித்த மகா விஷ்ணு ஒரு நாள் நாரதரை தேவலோகத்துக்கு வரும்படி அழைத்தார்.

இருவரும் இந்திர புரியை சுற்றிவந்தபோது ஓரிடத்தில் அழகான பூஞ்சோலை ஒன்றிருந்தது. தாமரைத் தடாகங்கள் தவழ்ந்தன. புள்ளினம் துள்ளிப் பறந்து குலவியது. கனிந்த பழங்கள் மரக்கிளைகளில் எழில் மிகு வண்ணத்துடன் கொத்து கொத்தாய் தொங்கின.

இத்தகைய ஆனந்தப்பூங்காவில் ரம்பை, ஊர்வசி போன்ற தேவமங்கையர் பலர் அழகுத் தெய்வங்களென நடமாடினர். ஆனுல் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் அங்கக் குறைபாடு இருந்தது, ஒருத்திக்கு மூக்கு இல்லாத குறை, ஒருத்தி ஒற்றைக்கண் குருடு. இன்னெருத்திக்கு ஒரு கை இல்லை, வேறெருத்திகாலில் முடமானவள்.

இந்த கண்ணராவியை பார்க்க நாரதருக்கு பெரிய துக்கம்வந்துவிட்டது. இவர்கள் ஏன் இப்படி அங்கவீனர்களாய் இருக்கிருர்கள் என்று திருமாலிடம் விசாரித்தார். அந்த மாய்மாலக் கள்வன் ஒன்றும் அறியாதவர் போல நாரதரை அவர்கள் பால் அழைத்துச் சென்று 'நீங்கள் ஏன் இவ்விதம் அங்கக்குறைவாக இருக்கிறீர்கள்?' என்று வினவினுர்.

அவ்வெழில் நங்கையர் பதிலளித்தனர்: 'ஐயனே! நாமெல்லோரும் மகாதேவனுல் படைக்கப்பட்ட ராகங்களின் சொருபங்கள். எங்களை ராகினிகள் என்றழைப்பார்கள். இதோ இவள் தான் கல்யாணி, அவள் பைரவி, இவள் ரஞ்சனி. எங்கள் எல்லோருக்கும் ஆண்டவன் அழகான உருவங்களைக் கொடுத்திருந்தான். ஆனுல், அந்தோ! நாரதன் என்ற பெயருள்ள ஒருவன் எங்கோ இருக்கிருனும். அவன் எங்களைப் பாடும்போது அபஸ்வரமாயும், முறைக்கு முரணுயும் பாடித் தொலைக்கிருன். ஒவ்வொரு தடவை அவன் அப்படி தவறுதலாய்ப் பாடும்போது எங்கள் அங்கங்களில் ஒவ்வொன்று அறுத்து போகிறது. இதுதான் எங்கள் சோகக்கதை.'

இதைக் கேட்ட நாரதர் தமது மடமையை உணர்ந்தார். இசையில் தம்மை மிக்காரில்லை என்று கர்வம் கொண்டிருந்தது பெரும் குற்றமென்று அறிந்தார். அதை உணர்த்துவித்த மகா விஷ்ணுவின் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டார்.

# கத்திக் குத்து: ஒருவர் கைது

சங்கானை, செவ்வாய்

வட்டுக் கிழக்கு மூளாய் ருேட்டில் செம்பாட்டான் தோட்டம் என்னும் குறிச்சியில் வசிக்கும் செ. கந்தசுவாமி என்பவர் கத்திக் குத்துக்காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பந்தமாக கிளியன் என்பவரை சங்கானைப் பொலிசார் கைது செய்துள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

இச்சம்பவம் காயப்பட்டவராகிய கந்தசுவாமி வீட்டில் நடைபெற்றதெனக் கூறப்படுகிறது.

# உடுவில் எம். பி. ஆஸ்பத்திரியில்

கொழும்பு, செவ்வாய்

உடுவில் எம் பி. திரு. வி. தர்மலிங்கம் கொழும்பு பெரியாஸ்பத்திரியில்கால் முறிவுக்குச்சிகிச்சை பெற்று வருகிருர்'

பாராளுமன்ற வாசகசாலையிலிருந்து நடந்து வரும் போது, கழுவப்பட்டிருந்த படிகளில் கால் வழுக்கி விழுந்துவிட்டதாக அவர் பத்திரிகை நிருபரிடம் தெரிவித்தார். முறிவு இடது காலில்.

# கோவிலில் சைக்கிள் களவு

சுழிபுரம், செவ்

தொல்புரம் மூட்டடியைச் சேர்ந்த முருகேசு வேதநாதன் வழக்கம்பரை அம்மன் கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு தமது துவிச்சக்கர வண்டியை வைத்த இடத்தில் பார்த்த பொழுது வண்டியைக் காணுததைத் தொடர்ந்து வட்டு - கிழக்கைச் சேர்ந்த ஒருவர் சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார். சங்கானைப் பொலிசார் விசாரணைநடாத்திவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் இலாகாவின் சாதனை!

கழிபுரம், செவ்.

தபால் இலாகாவின் 'சாதனை'யொன்றைப் பற்றி ஏழைத்தொழிலாளி யொருவர் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கத்திடம் புகார்செய்துள்ளார்.

தமது தபால் கந்தோர் பணச்சேமிப்பு புத்தகம் முடிவடைந்து விட்டதால் புதிய சேமிப்பு புத்தகம் தரும்படி கோரி கடந்த ஏப்ரல் 30-ந் திகதி முடிவடைந்த சேமிப்புப் புத்தகத்தை பண்ணுகம் தபால் கந்தோரில் ஒப்படைத்திருந்தார் இந்த நபர். மூன்று மாதங்களாகியும் புதிய சேமிப்புப் புத்தகம் இந்த நபருக்கு வந்து சேரவில்லை.

ஏழைத் தொழிலாளியாக கூலிவேலைசெய்து பிழைக்கும் இவருக்கு அடிக்கடி பணக்கஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருந்தும் சேமிப்புப் புத்தகம் கைவசம் இல்லாததால் எந்தக்காரணத்தை நினைத்து சேமித்தாரோ அந்தச் சேமிப்பு அவருக்கு உதவாமல் போய்விட்டதாம்!

சேமிப்பு மா அதிகாரிக்கு இதுசம்பந்தமாக பண்ணுகம் உபதபாலதிபர் ஊடாக ஒரு கடிதமும் இப்போது அனுப்பிவைத்துள்ளார்.

## சிரமதானம்

யாழ்ப்பாணம், புதன்

பாஷையூர் மக்கள் முன்னேற்றச்சங்க சனசமூக நிலையத்தினர் பாஷையூர்த்துறை முகக் கால்வாயை இம்மாதம் 15-ம் 16-ம் திகதிகளில் சிரமதானமூலம் ஆழமாக்கும் பணியை மேற்கொள்வார். யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் முதல் நாள் நிகழ்ச்சியைக் காலை 8-45 மணியளவில் ஆரம்பித்து வைப்பார்.

''நீர் வற்றுங்காலங்களில் இயந்திரப்படகுகளும் சிறு வள்ளங்கள்தானும் கரைக்குவர முடியாதிருக்கிறது. இதனால் தொழிலாளர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இவர்கள் கஷ்டத்தைப் போக்கவே இப்பணியை சங்கம் மேற்கொள்கிறது'' என்று சங்கம் இதுசம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

மாவிட்டபுரம், செவ்

தெல்லிப்பளை வடமேற்கு கருகம்பானை தமிழரசு வாலிப முன்னணியின் அங்குரார்ப்பணக்கூட்டம்கவுணவத்தை வைரவர் கோயில் முன்றலில் திரு. தம்பிப்பிள்ளை கதிரேசு தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திருவாளர்கள் உமாவதிசிவம், த. கதிரேசு, தலைவர்: திரு சி தியாகராசா, உபதலைவர்: திரு சு ஜெயரத்தினம், காரியதரிசி: திரு. வ. நடராசா, உபகாரியதரிசி திரு க சிவபாலன், தனாதிகாரி: திரு க செல்வராசா. ஆறு பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## 'உண்மையான மனிதன் யார்'

காத்தான்குடி, செவ்.

'இஸ்லாமியன் ஒவ்வொருவனும்மனிதனாக வாழவேண்டுமென்பதுதான் நபி பெருமானின் இலட்சியம். யார் மனிதன்? பல்வேறு அங்கங்களால் உருவாக்கப்பட்டுவிட்டால் அவன் உண்மையான மனிதனாகிவிடமுடியுமா? இறைவனை நினைந்து இறைவன் படைப்பினைப் பார்த்து மனம் துடிப்பவன்தான்உண்மையான மனிதன்'

காத்தான்குடியில் நடைபெற்ற மீலாத் விழாவில் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் ஜனாப் சி செய்னுர் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

## 'பொருளாதார வளர்ச்சிக்கு உழைக்கவேண்டும்'

கழிபுரம், செவ்.

''எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக நாம் அதிகம் பாடுபட்டு உழைக்க வேண்டும். ஒவ்வோர் சனசமூக நிலையங்களுக்கும் வாசிகசாலை, விளையாட்டுப் போட்டிகள்ஆகியன நடாத்துவதுடன் மட்டும் காலத்தைக்கழிக்காது நாட்டுக்கு வேண்டிய உணவு வகைகளை அதிகம் உற்பத்தி செய்ய வேண்டும்'' என யாழ் மாவட்ட சனசமூக சமாஜ செயல்கமிட்டிக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசிய சமாசத்தலைவர் சமூக ஜோதி சி. தியாகராசா குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் பப்பாய் வெங்காயம் மிளகாய்போன்ற பயிர்களை அதிகம் உற்பத்தி செய்ய சனசமூக உறுப்பினர்களுக்கிடையே ஓர் பரிசு கொடுக்கும் திட்டத்தை சனசமூக சமாசம் பொறுப்பேற்று நடாத்தவேண்டும் என்றார்.

## மகளிர் கல்லூரி விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மகளிர் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டி கல்விப் பகுதி திரு. சி. ஏ. ஞானசேகரம் தலைமையில்நடைபெற்றது. 5 இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் சரஸ்வதி இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றது, மற்றும் பார்வதி இல்லம் இரண்டாம் இடத்தையும் அருந்ததி இல்லம் மூன்றும் இடத்தையும்பெற்றன. அதிகமான போட்டிகளில்திறமையாகப்போட்டியிட்ட வீராங்கனைகளான கே, சந்திரகுமாரி, ஆர். பத்மாவதி, அமிர்தலக்சுமி, நாகபூசணி ஆகியோர் மேற்பிரிவிலும், எஸ். சைலஜா, கே. அன்னலெட்சுமி, எம். விமலேஸ்வரி ஆகியோர் மத்திய பிரிவிலும், கௌரிகுமாரி, என். இந்திரமலர், பி. கமலாவதி ஆகியோர் கீழ்ப்பிரிவிலும் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு திரு. சி. ஏ. ஞானசேகரம்பரிசில்களை வழங்கினார்.

# கல்லூரிகளின் விளையாட்டுபோட்டி

ஊர்காவற்றுறை, செவ்

காரைநகர் இந்துக்கல்லூரி விளையாட்டுப்போட்டி சமீபத்தில் நடைபெற்றது. பாரதி இல்லம் 151 புள்ளிகளைப் பெற்றுச் சாம்பியனானது. காந்தி, சாயம்பூ இல்லங்கள் 131 புள்ளிகளையும் நடராசா இல்லம் 69 புள்ளிகளையும் பெற்றன.

பிரதம விருந்தினராகத் தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. பற்றிக் கலந்துகொண்டார். பிரதம ஆசிரியர் திரு. தியாகராசா வரவேற்றுப் பேசினார்.

### சாம்பியன்கள்

கீழ்ப்பிரிவு: (ஆண்) எம். குமாரசாமி, கே. சண்முகமூர்த்தி, (பெண்) கே. நாகேசுவரி.

(மத்திய பிரிவு: (ஆண்) ஜெயகுமார் - ஜேக்கப், (பெண்) கே. கமலாம்பிகை,

மேற்பிரிவு: (ஆண்) கே. சிவலிங்கம், (பெண்) ஆர். எஸ். ரி. அம்மா.

கயிறு இழுத்தல் போட்டி: பாரதி இல்லம்.

அஞ்சல் ஓட்டம்: காந்தி இல்லம்,

ஃ ஃ ஃ

சங்கானை, திங்கள்

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இம்மாதம் 15ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்குக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

பிரதம விருந்னராக வடபெரும்பாக உதவி அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் கலந்து கொள்வார்.

ஃ ஃ ஃ

கோண்டாவில், செவ்.

இணுவில் சைவமஹாஜன வித்தியாசாலை இல்லங்களுக்கான வருடாந்த விளையாட்டுப்போட்டி தலைமையாசிரியர் திரு. வ. நடராசா தலைமையில் நடைபெற்றது. உடுவில் வட்டார வித்தியாதரிசி திரு. ஆ. சிவகுரு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இப்போட்டியில் மயில்வாகனம் இல்லம் கூடுதலான புள்ளிகளைப் பெற்று இவ்வருட சாம்பியன் கேடயத்தைச் சுவீகரித்தது. இரண்டாம் இடத்தை பொன்னையா இல்லமும், மூன்றும் இடத்தை அப்பாக்குட்டி இல்லமும் பெற்றது.

சாம்பியன்கள் விபரம் வருமாறு:

ஆண்கள்— ஆ இ சின்னராசா மேற்பிரிவு, ஆ இ அரியரத்தினம் மத்திய பிரிவு, ஆ இ ஸ்ரீதரன் கீழ்ப்பிரிவு, ஆ க சிவானந்தன் ஆரம்பபிரிவு.

பெண்கள்— க பத்மினி மேற்பிரிவு, செ கலாநிதி மத்தியபிரிவு, சி பத்மாவதி கீழ்ப்பிரிவு, கு அம்பிகை கீழ்ப்பிரிவு, தி யோகராணி ஆரம்பபிரிவு.

ஃ ஃ ஃ

சங்கானை, செவ்

உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இம்மாதம் 16ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதி வண. டாக்டர் எஸ். குலேந்திரன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், புதன்

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமுகநிலையக் கோஷ்டியினருக்கும், காரைநகர் கடற்படைக்கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்டத்தில் ஸ்ரீ கலைமகள் சனசமுகநிலையக் கோஷ்டியினர் வெற்றியீட்டியுள்ளனர்.

ஸ்ரீகலைமகள் ச. ச. நிலையக் கோஷ்டியினர் கோண்டாவில் இளைஞர் கோஷ்டியினருடன் ஆடிய இன்னொரு சிநேகபூர்வமான ஆட்டத்திலும் வெற்றியீட்டினர்.


விநியோகஸ்தர்களே
கையிருப்பு
வைப்பவர்களே
கட்டிடம்
கட்டுவோர்களே!

இன்றே உங்களுக்குத் தேவையான எஸ் - லோன் குழாய்க்கு பதிவு செய்து போதிய கையிருப்பை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள்.

எஸ் - லோனைப் பார்க்கிலும் சிறந்ததொன்றை நீங்கள் குறிப்பிடமுடியாது




எஸ்-லோன்



ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்,
மகாராஜா கட்டிடம், பாங்ஷால் வீதி,
கொழும்பு-11.

எஸ் - லோன் உலகமெங்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதற்குத் துணை செய்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பின்பக்கத்தால்வந்து எதிரி பிடரியில் பொல்லால் அடித்தார்"

## உடுவில் கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

''சம்பவம் நடப்பதற்கு முன் சனசமூகநிலையத்தில் 'பெட்ரோல் மாக்ஸ்' விளக்கைக் கொளுத்தி ஒரு கம்பியில் தொங்கவிட்டேன். சம்பவம் நடந்தபின் நான் வந்து பார்த்தபொழுது, பெட்ரோல்மாக்ஸையும், கம்பியையும் காணவில்லை. காணாமல் போனதுபற்றி நான் பொலிஸாரிடம்புகார் செய்யவில்லை.''

உடுவில் கொலை வழக்கில் எதிரியின் வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி. குறுக்குவிசாரணை செய்தபோது, சாட்சியமளித்த சின்னத்தம்பி பாலசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையைப் பார்ப்பதற்காக நீதிமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். பலர் நகரமண்டப வளவிற்குள் நீண்டநேரம் காத்துநின்றனர். நீதிமன்றத்திற்குள் இடம் கிடைக்காமல் பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். பெண்களும், பாடசாலை மாணவிகளும். விசாரணையைப் பார்ப்பதற்காக வந்திருந்தனர்.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7-ம் திகதி உடுவிலில் ரத்தினம் குமாரதாசன் என்பவர் சிவகுரு பரராஜசிங்கத்தை பொல்லால் அடித்து கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி., அட்வகேட் எம் எஸ். சுந்தரலிங்கத்தின் உதவியுடனும், புறக்டர் ரி. குணரத்தினத்தின் அனுசரணையுடனும் ஆஜரானார். எதிர்க்காக அரசாங்கத்தால் புறக்டர் வி. பி. சுந்தரலிங்கம் நியமிக்கப்பட்டிருந்தார்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சாட்சியை சுமார் இரண்டரை மணித்தியாலம் குறுக்கு விசாரணைசெய்தார். குறுக்கு விசாரணையின் போது, சம்பவம் நடந்த தினம் எதிரி எப்படி பொல்லுடன் வந்து அடித்தார் என்பதை கோர்ட்டில்சாட்சி செய்துகாட்டினார். இதனை நீதியரசரும், ஜூரியினரும், டாக்டர்களும், வழக்கறிஞர்களும் பார்த்துக்கொண்டிருந்தனர்.

சம்பவம்நடந்த இடத்தை இன்று காலை நேரில்சென்று பார்வையிடுவதென முதலில் தீர்மானிக்கப்பட்டது. முக்கிய சாட்சிகள் சாட்சியமளித்த பின்பே இடத்தைப் பார்வையிட வேண்டுமென்றும் திரு ஜி ஜி பொன்னம்பலம் கேட்டுக்கொண்டார். இதனை ஏற்றுக்கொண்ட நீதியரசர், இடத்தைப் பார்வையிடுவதைப் பின்போட்டார்

சின்னத்தம்பி பாலசுந்தரம் சாட்சியமளிததபோது கூறியதாவது:

சம்பவம் நடந்த தினம் மாலை 6 மணிக்கு கற்பக விநாயகர் சனசமூகநிலையக் கூட்டத்திற்குச் சென்றேன் சனசமூகநிலையக் காரியதரிசி நான் தான். சிவபாலசிங்கம் தலைவர் இறந்தவர் ஒரு அங்கத்தவர். எதிரி தனாதிகாரியாக இருந்தவர். 64-ம் ஆண்டு தனாதிகாரிப் பதவியை எதிரி விட்டுவிட்டார்.

அன்று நான் பெற்ரோல் மாக்ஸ் விளக்கைக்கொளுத்தி ஒரு கம்பியில் தொங்கவிட்டேன். கூட்டத்திற்கு ஆயத்தம்செய்தேன். அந்நேரம் பொழுதுபடவில்லை சனசமூகநிலையத்திற்கு நான் தான் முதலில் சென்றேன். பின்பு மற்றவர்கள் வந்தார்கள். மாலை 6-15 மணிக்கும் 6-30 மணிக்குமிடையில் இறந்தவர் வந்தார். அவர் வரும்போது பொழுதுபடவில்லை. அச்சமயம் ஞானசேகரம், தர்மலிங்கம், கந்தையா, தம்பிராசா, சி கந்தையா ஆகியோரும் இருந்தார்கள்

இறந்தவர் சனசமூகநிலையத்திற்கு முன்னால் நின்றார் எதிரி குமாரதாசன் பின்பக்கம் வந்து தலையில் இரண்டு அடி அடித்துவி

(5 ம் பக்கம் பார்க்க)

---

REGAL—JAFFNA

NOW SHOWING

Sean Connery - as "James Bond" in

**From Russia With Love**

(Techni Color)

---

**நியூ காலிங்கன்**

(இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறை தினங்களில் 2-30 மணி

நாகேஷ் - கே.ஆர். விஜயா நடித்த

**சர்வர் சுந்தரம்**

---

**ராஜா**

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30

போயா தினங்களில் 4 காட்சிகள்

மகாலிங்கம் - யோகமங்களம் நடித்த

**வேதாள உலகம்**

---

## 3-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)

பி. ப. 3, 6, 9-30 மணி

ஒரு பெண் பைத்தியமாக இருந்தபோது எதற்கோ சிரித்தாள்......எதற்கோ அழுதாள். ஆனால் மனநிலை தெளிந்த பிறகோ எதற்கோ துடித்தாள்.

மனநிலை தெளிந்த ஒரு பெண்ணின் சிறு கதைதான்

ஆடலழகி **ஜெயலலிதா,**

புதுமுகம் **ஸ்ரீகாந்த்**

**நிர்மலா, மூர்த்தி, ஆஷா**

மற்றும் பலர் நடித்த

சித்ராலயா அளிக்கும்

ஸ்ரீதரின்

# "வெண்ணிற ஆடை"

(ஈஸ்ட்மன் கலர்)

இசை:—விஸ்வநாதன், ராமமூர்த்தி

கதை, வசனம், டைரக்ஷன்

ஸ்ரீதர்

---

## கல்லுண்டாயில் புதையல் கோஷ்டி!

சங்கானை, புதன்

சங்கானையைச் சேர்ந்த சிலர், கல்லுண்டாயில் பெரும் புதையல் இருப்பதாகக்கூறி, அங்கு இரு சிறுவரையும் அழைத்துக் கொண்டு சென்றதாகத் தெரிகிறது

வழியில் மந்திரவாதி ஒருவரும் இக்கோஷ்டியுடன் சேர்ந்து கொண்டாராம். புதையல் எடுக்குமிடத்தடியில் மந்திரவாதியின் கையாள் ஒருவர் கையில் கத்தியுடன் வந்து, அங்கு வந்த கோஷ்டியினரைப் பயமுறுத்தித் துரத்திவிட்டாராம்.

இந்த மந்திரவாதி புதையல் எடுப்பதற்கெனக் கூறிச் சிலரிடப் பணம் ஏமாற்றிப் பெற்றதாகவும்அறியக்கிடக்கிறது.

இவ்விஷயம் பொலிஸார் கவனத்தில் இருப்பதாகவும், மந்திரவாதி தலைமறைவாக இருக்கிறார் எனவும் தெரிய வருகின்றது.

---

## சி. பி. டியின் வவனியா விஜயம்

வவனியா, செவ்வாய்

இம்மாதம் 23-ந் திகதி காணி விவசாய மந்திரி திரு. சி. பி. டி. சில்வா முத்தியம்கட்டு குடியேற்றத் திட்டத்தை பார்வையிடுவதற்காக வவனியாவுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

---

## பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், புதன்

இளவாலை அர்ச். கல்லூரி பெற்றார் பரிசளிப்பு விழா இம்மாதம் 15-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

---

## பட்டப்பகலில் கார் திருட்டு!

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம். புதன்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் நேற்றுப் பிற்பகல் நிறுத்தியிருந்த பச்சை நிறமுடைய கார் ஒன்று திருடப்பட்டுள்ளது. இந்தக் கார் மயிலிட்டியைச் சேர்ந்த ஆனந்தகுமாரசாமிக்குச் சொந்தமென அறியப்படுகிறது. இவர்யாழ்ப்பாண பொலிஸாருக்கு புகார்செய்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாண உதவிப் பொலிஸ் அதிபர் திரு. பி. மகேந்திரன் தலைமையில் பொலிஸார் காரைத் தேடுகின்றனர் இதுவரை எவரும் கைதாகவில்லை. (ந. நி.)

---

## மயிலிட்டிக் கிராமசபையின் கேள்வி விளம்பரம்

மயிலிட்டிக் கிராமசபைத் தலைவரால், மயிலிட்டி வடக்கு செபமாதா கோவில் ஒழுங்கைத் திருத்த வேலைக்கான கேள்விகள் 27-7-66-ம் திகதி காலை 9-30 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள், ரூபா 25/-ம், கேள்விப்பத்திரச் செலவு ரூபா 5/-ம் கட்டி கிராமசபைக் கந்தோரில், 25-7-66-ம் திகதி பகல் 12 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கொண்டு இவ்வேலையைப் பற்றிய விபரங்கள் கிராமசபைக் கந்தோரில் வேலை நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

சி. அருணாசலம்,
தலைவர்,
கிராமசபை, மயிலிட்டி.

கிராமசபை அலுவலகம்,
மயிலிட்டி,
காங்கேசன்துறை,
11-7-66. 661

---

## கொம்மிஷனுக்கு

சகல வசதிகளுடனும் கூடிய தேநீர் கடை மாம்பழம் சந்தியில் கொம்மிஷனுக்கு உண்டு. 183, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 748

---

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் சகல வசதிகளும் அடங்கிய புதியவீடு 1-8-66 முதல் வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: 37 A, ஆஸ்பத்திரி வீதி தொடர்பு கொள்ளவும். 747

---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னின் அனுமதியின் பேரில் பிரிட்டிஷ் வர்த்தக சபை விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்தே ஸ்கொத்லாந்து துப்பறியும் பொலிசார் இங்குவரவழைக்கப்பட்டுள்ளனர். அடுத்த சில தினங்களில் இங்கு வரவிருக்கும் இவர்களுக்கு இலங்கை பொலிசார் உதவியளிப்பார்கள்.

இங்குள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனுக்கு திரு. எமில் சவுந்தரநாயகம் தம்மை விசாரணை செய்யலாமென்றும் கொழும்பு மாஜிஸ்டிரேட் ஒருவர் தமது சாட்சியங்களைப் பதிவு செய்து கொள்ளலாமென்றும் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, திரு. சவுந்தரநாயகம் பற்றி விபரம் அறிவதற்காக வெளிநாடுகளிலுள்ள குறிப்பாக பிரிட்டனிலுள்ள பத்திரிகைக் காரியாலயங்களிலிருந்து இங்குள்ள பத்திரிகைகளுக்கு அடிக்கடி தந்திகளும் டெலிபோன் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

திரு. சவுந்தரநாயகத்தை பேட்டி காண்பதற்காக பல பிரிட்டிஷ் பத்திரிகைநிருபர்கள் சிங்கப்பூரிலிருந்தும், டில்லியிலிருந்தும்இங்குபடையெடுத்தனர். நள்ளிரவிலும் அதிகாலையிலும் திரு. சவுந்தரநாயகத்தை பிரிட்டிஷ் நிருபர்கள் பேட்டி காண முனைந்தனர் என்றும் பல தடவை தோல்வி கண்டனர் என்றும் கூறப்படுகிறது.

---

## மரண அறிவித்தல்

சரவணை செல்வக் கதிர்காம முருகன் — ஆலயத்தின் உரிமையாளரும், பிரதம பூசகருமான திரு. அந்தோனி செல்லப்பாக்கியம் அவர்களின் அருமை மனைவியும், ஊர்காவற்றுறை திரு பா. அந்தோனி அவர்களின் மருமகளும் இலங்கைப்புகையிரதப்பகுதியைச் சேர்ந்த திரு. மா. சதாசிவம் அவர்களின் மைத்துனியும் மேற்படி ஆலயத்தின் சாமியம்மாவுமான பொன்னியம்மாள் 11-7-66 திங்கட்கிழமை இரவு சிவபதமடைந்துள்ளார். அன்னாரின் பூதவுடல் 14-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி வரையில் மேற்படி ஆலயத்திற்கு அருகாமையில் நல்லடக்கம் செய்யப்படும். சமாதிநிதி உதவி ஏற்றுக்கொள்ளப்படும். சி. கந்தசாமி, சரவணை மேற்கு, வேலணை. 746

---

# க. சி. சண்முகரெத்தினம்

காலஞ்சென்ற டாக்டர் க. சி. சண்முகரெத்தினம் அவர்களின் அந்தியட்டி கிரியைகள், ஜூலை மாதம் 15-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் கீரிமலையிலும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை கீரிமலையிலுள்ள சிறுப்பர் மடத்திலும் நடைபெறும். மறுநாள் 16-ம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு டாக்டர் சண்முகரெத்தினம் அவர்களின் இல்லத்தில் (407, கே. கே. எஸ். வீதி, வண்ணை ) அந்தணர்க்கு தானம் வழங்குதலும், அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும், மாலை 5-00 மணிக்கு வண்ணை ஸ்ரீ ஞானவைரவர் கோவிலில் விசேஷ பூசையும், நினைவுப் பிரார்த்தனையும் நடைபெறும்.

க. சி. தங்கராசாவும், பர்வதவர்த்தனி சண்முகரெத்தினமும், பிள்ளைகளும், குடும்பத்தினரும் உறவினர்களையும், நண்பர்களையும்அமரத்துவமெய்தியசண்முகரெத்தினம் அவர்களோடு பலவழிகளாலும் தொடர்பு கொண்டவர்களையும் இந்தவைபவங்களில்கலந்துகொள்ளுமாறு அன்போடு அழைக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் அழைப்பு விடுக்க முடியாமையை இட்டு அவர்கள் வருத்தம் தெரிவிக்கின்றார்கள்.

407, கே. கே. எஸ். வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
12-7-66 654

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி. 33-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org